# நூறாவது ஆண்டு சிறப்பு மலர்

# யா/கரணவாய் தாமோதர வித்தியாலயம்

கற்று ஒழுக

## 1911 - 2011

# யா / கரணவாய் தாமோதர வித்தியாலயம்

கற்று ஒழுகு

# நூறாவது ஆண்டு சிறப்பு மலர்

# 1911 - 2011

யாழ் / கரணவாய் தாமோதர வித்தியாலயம்

கற்று ஒழுக்க

# பாடசாலைக் கீதம்

வாழ்க வாழ்க வாழ்கவே – நலம்
சூழ்க தாமோ தரத் தாயே
வாழுங் கல்வி வளர் கவே
நாளுங் கற்று ஓங்கு வோம்

புனிதம் நிகழும் பேணுவோம்
மனிதம் மலர மகிழு வோம்
இனிய பொதுமை போற் றுவோம்
தனித்த புலமை காணுவோம்

நன்மை என்றுஞ் சிறக்கவே – குரு
சொன்ன மொழியில் விளங்குவோம்
தொன்மை தாண்டும் அணைப்பிலே
அன்னை தமிழை வாழ்த்துவோம்

எண்ணிய இனிது எய்திடுவோம்
கண்ணென மெய்மை காத்திடுவோம்
பண்ணிசை மாலை பாடிடுவோம்
பண்ணவன் பதமலர் பணிந்திடுவோம்



அமரர் இராமலிங்கம் தாமோதரப்பிள்ளை

ஸ்தாபகர்

தோற்றம் : 20.06.1872 மறைவு : 05.05.1941

## மகுட வாசகம்

# கற்று ஒழுகுக

### தூரநோக்கு VISION

எதிர்கால உலகின் முன்னேற்றத்திற்கு ஏற்ற வகையில் மாணவர்களைத் தயார்ப்படுத்தி அவர்களை வாழ்வில் வெற்றிபெறச் செய்தல்

### நோக்கக் கூற்று MISSION

- பாடசாலையைத் தரமான கல்வியை வழங்கும் வகையில் கல்விப் புல மாற்றங்களுக்கு ஏற்ற விதத்தில் தயார்ப்படுத்தல்
- நவீன மாற்றங்களை உள்வாங்கும் விதத்தில் ஆசிரியர் வாண்மையை விருத்தி செய்தல்
- கல்வி அறிவுள்ளதும் ஒழுக்க விழுமியங்களைக் கொண்டதுமான சமுதாயத்தை உருவாக்க உதவுதல்.

# பொருளடக்கம்


- அதிபரின் உள்ளத்திலிருந்து....
- மலர்க்குழுவின் பார்வையில்....
- சைக்குருப் பீடாதிபதியின் ஆசிச் செய்தி
- கல்வி அமைச்சின் செயலாளரிடமிருந்து....
- வடமாகாண கல்விப் பிரதிச் செயலாளரிடமிருந்து...
- வலயக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி
- பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி
- பாடசாலை அபிவிருத்திச் செயலாளரின் வாழ்த்து
- நூற்றாண்டுச் சபைக் குழுத் தலைவரின் வாழ்த்து
- பிரதம விருந்தினரின் வாழ்த்து
- வித்தியாலய வரலாறு
- இறைவுணர்வின் விஞ்ஞான அடிப்படை
- கணித பாடத்தில் மாணவர்களின் பின்னடைவு
- என் நினைவில் தாமப்பா பாடசாலை
- நான் கற்ற பாடசாலை
- எனது நினைவுச் சுவடுகளில்...
- ஆசிரியர் தொழில் வாண்மை
- மானிடப் பிறப்பில் ஆசிரியர் தொழில்
- மாணவனது பூரண வளர்ச்சியில் பாடசாலையின் பங்கு
- குழந்தை வளர்ச்சிப் பருவமும் அதன் ஒழுக்க நெறிகளும்
- ஆரம்பக்கல்வியின் முக்கியத்துவம்
- எமது பாடசாலை
- கல்வி (கவிதை)
- நாமும் கல்வியும்
- My School, My Self
- மாணவர்களும் கல்வி வளர்ச்சியும்
- எனது பாடசாலை (கவிதை)
- My Self
- பாடசாலை (கவிதை)
- பாடசாலை செல்வேன் (பாட்டு)



**PRINCIPAL**

**MR. SITHTHIRAVELU KURUKULALINGAM**



## அதிபரின் உள்ளத்திலிருந்து.....

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு" என்பது திருக்குறள்.

எந்தவிதமான நன்மையை மறந்தவர்களுக்கும் உய்வுண்டு ஆனால் பயன் கருதாது செய்யப்பட்ட நன்றியை மறந்தவர்க்கு உய்வேகிடையாது என்பதை இத்திருக்குறள் எடுத்தியம்புகிறது.

இந்த வகையில் இப்பாடசாலையின் ஸ்தாபகர் திரு. இ. தாமோ தரம்பிள்ளை அவர்களால் தனக்கோ அல்லது தன் குடும்பத்தினருக்கோ நன்மைதரும் வகையில் ஸ்தாபிக்கப்பட்டதல்ல இப்பாடசாலை. இக்கிராம மக்களின் நன்மைகருதியும், தான்சார்ந்த தமிழ் சமூகத்தின் நன்மைகருதியுமே இப்பாடசாலையை 1911ஆம் ஆண்டு தனது சொந்தக் காணியில் நிறுவினார். அத்தகைய பெரியோன் தாமோ தரனாரின் செய்நன்றியை மறவாது அவரை நினைவுகூர்ந்து இப்பாடசாலையின் அளப்பரிய நூற்றாண்டு சேவையையும் நினைவுகூர்ந்து இவ்விழா நிகழ்வு இடம்பெறு கிறது. இவ்விழாவை சிறப்பாக கொண்டாடவேண்டுமென தீர்மானித்து செயற்படுகின்ற பெற்றோருக்கும். குறிப்பாக விழா குழுவினருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.


இப்பாடசாலையானது அரசினால் 1962 இல் சுவீகரிக்கப்படமுன் ஆரம்பக் கல்வியுடன் இடைநிலைக்கல்வியையும் வழங்கி வந்தது. அக்காலகட்டத்தில் சிறந்த பல கல்விமான்களை உருவாக்கி புகழ்பூத்த ஒரு பாடசாலையாக விளங் கியமை இன்றும் பல கல்விமான்களால் நினைவு கூரப்படுகிறது. அரச பாடசாலை யாக்கப்பட்டபின் ஆரம்பக் கல்வியை வழங்கும் பாடசாலை களில், முதன்மைப் பாடசாலைகளில் இப்பாடசாலையும் ஒன்றாகும். தரம் 5 புலமைப் பரீட்சையில் வருடந்தோறும் பல மாணவர்கள் சித்திபெறுவது குறிப்பிடத்தக்க ஒரு அம்சமாகும். இப்பாடசாலையின் நூற்றாண்டு சேவையில் இந்தவருடம் தரம் 5 புலமைப் பரீட்சையில் அதிகூடிய எண்ணிக்கையாக 12 மாணவர்கள் சித்தியெய்தியமை மிகுந்த சந்தோசத்தைத் தருகிறது.

கற்றல் கற்பித்தலுக்குத் தேவையான வளப்பற்றாக்குறை இப்பாட சாலையில் இருக்கின்றபோதும் இப்பாடசாலையானது தரமான கல்வியை வழங்கி வருகின்றது. இதற்காக மிகுந்த பொறுப்புணர்வோடு செயற்பட்ட முன்னாள் அதிபர் ஆசிரியர்களின் சேவை இவ்வேளையில் நினைவு கூறுகிறேன். பாடசாலைக்கான பல்வேறு உதவி களை செய்வதற்கு பாடசாலைச் சமூகத்திலிருந்து பலரும் முன்வருகின்ற பொறுப் புணர்வு வரவேற்கத் தக்க ஒரு அம்சமாகும். அதேபோல் பாடசாலைச் செயற்பாடு களுக்கு மதிப்புமிகு வலயக் கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், கணக்காளர் ஆகியோரின் பங்களிப்பும், பாடசாலையின் வளர்ச்சிக்கு பக்கபலமாக அமைந்தது.

எமது பாடசாலை ஒரு நூற்றாண்டைக் கடந்து அடுத்த நூற்றாண்டை

நோக்கி காலடி எடுத்துவைக்கும் இவ்வேளையில் பாடசாலையின் வரலாற்றுத் தகவல்களை இயன்றளவு உள்வாங்கி ஓர் ஆவணமாக வெளிவரும் இம் மலர் பாடசாலையின் சிறப்பினை எடுத்தியம்பும் என்பதில் நானும், மலர்க் குழுவினரும், விழாக்குழுவினரும், பாடசாலைச் சமூகமும் பெருமகிழ்வடைவ துடன் நூற்றாண்டு விழாப்பணியுடன் இப்பாடசாலை மேலும் சிறப்புற எமது பணியினை செவ்வனே நிறைவேற்றுவோமாக.

**திரு. சி. குருகுலலிங்கம்**
அதிபர்,
யா/காரணவாய் தாமோதர வித்தியாலயம்



பாடசாலை நூற்றாண்டு விழா மலர் குழு..

# மலர்க்குழுவின் பார்வையில்


யா/ கரணவாய் தாமோதர வித்தியாலயத்தின் 100 ஆண்டு வரலாற் றினை எதிரொலிக்கும் மலராக இதனைப் படைக்க வேண்டும் என்று முயன்றோம்.

இப்பாடசாலையை 1911ல் தாபித்த அமரர் இராமலிங்கம் தாமோதரம் பிள்ளை அவர்களின் சமூகக் கடமையை நாம் என்றும் மறக்க இயலாது. அவரால் உருவாக்கப்பட்ட இப்பாடசாலை இன்று இக்கிராமத்தின் வளர்ச்சி யையும் பாரம்பரியத்தினையும் அடையாளப்படுத்தி நிற்கும் ஒரு வலுவான சமூகமட்ட நிறுவனமாக மிளிர்க்கிறது. சமூக முன்னோடியான அவர் கல்வி, பொருளாதாரம், மேலும் பல கட்டுமான வசதிகள் பெருகிய இந்தக் காலத்தில் சாதித்து விட முடியாத செயலை அப்போது செய்து உதவியுள்ளார். அவரிடம் இப்படி ஒரு தொலைநோக்கு இருந்துள்ளதை எண்ணும் போது உவகை பொங்குகிறது.

மேலும் அன்றில் இருந்து இன்று வரை இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு, உயர்ச்சிக்கு உதவியவர்கள், காரணகர்த்தாக்களாக இருந்தவர்கள் பலர். அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் பழைய மாண வர்கள், நலன்விரும்பிகள் ஆகிய அனைவரும் எம்மால் நினைவு கூர்ந்து போற்றத்தக்க அணையாத விளக்கின் ஒளிகள் ஆவர்.

எமது பாடசாலையின் மாணவ சமூதாயத்திற்கான பணி மேலும் பல ஆண்டுகள் தொடர்வதற்கு இறைவனின் அருள் என்றென்றும் கிடைப்பதாக வேண்டி எமது பாடசாலை அன்னையின் பாதங்களில் இம்மலரினை நன்றியுணர்வோடு சமர்ப்பிக்கின்றோம்.

**நூற்றாண்டு விழா**
**மலர்க்குழு.**



## அகில உலக சைவக்குருமார் சம்மேளன குருபீடாதிபதியின் ஆசிச் செய்தி

யா/ கரணவாய் தாமோதர வித்தியாலயம் தனது சேவையில் நூறு ஆண்டைப் பூர்த்திசெய்வதையிட்டும், அதனையிட்டு சிறப்பு மலர் வெளிவருவதையிட்டும் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.


பத்து தசாப்த காலம் வடமராட்சியின் நடுநாயகமாக அமைந்து கல்விப் பணியாற்றும் தாமோதரா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

"கண் உடையார் என்பார் கற்றோர் முகத்திரண்டு புண் உடையார் கல்லாதவர்" என்ற தெய்வப்புலவர் திருவள்ளுவர் வாக்கிற்கேற்ப இவ்வித்தியாலயம் தன் பணியினை அர்ப்பணிப்புடன் செய்து வருவது போற்றுவதற்குரிய விடயமாகும்.

இன்றைய கணனி உலகில் நல்லொழுக்கமுள்ள நற்பிரஜைகளை உருவாக்குவது காலத்தின் கட்டாயமாக உள்ளது. நூற்றாண்டுகளைப் பூர்த்தி செய்யும் இத்தருணத்தில் கல்விப் பணியில் தம்மை இணைத்து அரும் பணியாற்றிவரும் அதிபர், உபஅதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் சமூக ஆர்வலர்கள் கலாசாலை, சமூகத்தவர்கள் யாவருக்கும் எனது நல்லாசிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

***சிவஸ்ரீ. சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர்*** J.P.
பிரதமகுரு வல்வை ஸ்ரீ முத்துமாரி கோவில்

## கல்வி அமைச்சின் செயலாளரிடமிருந்து.....



யா/ கரணவாய் தாமோதரா வித்தியாலயம் சிரேஸ்ட பாடசாலையாக இருந்து தமிழ்மொழி மூலம் பலரைச் சிரேஸ்ட பாடசாலை தரத்திற்கு சித்தி பெறச் செய்தமையால் இந்த நாட்டிலும், சிங்கப்பூர் மற்றும் மலேசியா போன்ற நாடுகளிலும் ஆசிரியத் தொழிலைப் பெற்றுச் சேவை செய்ய உயர்த்தியது என்றால் மிகையாகாது. தற்போது இது ஓர் ஆரம்பப் பாடசாலையாக இருப்பி னும் அனுமதி பெறுவதற்குப் பெற்றோர்கள் முன் வருவது பாராட்டிற்குரிய தொன்றாகும்.

அந்த வகையில் இங்கு கற்கும் மாணவர்களிற்கு எண், எழுத்து, என்பவற்றை ஐயம் திரிபறக் கற்பிப்பதுடன் சமய ஒழுக்கப் பண்புகளையும் விருத்தி செய்வது அறியக் கூடியதாக உள்ளது. இந்த பகுதியில் பாடசாலை செல்லாத மாணவர்கள் இல்லை எனும் ஒரு புள்ளி விபரம் பாடசாலையின் கல்வித் தொண்டிற்கு ஒரு காட்டியாக விளங்குகின்றது. இப் பகுதியின் பெற்றோர்கள் பாடசாலை முகாமையுடன் ஒன்றிணைந்து செயற்படுவது சிறப்பான அம்சமாகும். இவ்வாறு இணைந்து செயற்படுவதனால் பாடசாலை யின் கல்வி அடைவும் உயர்வாக உள்ளது. நூறாண்டு கல்வித் தொண்டாற் றிய இப் பாடசாலை தொடரந்தும் மாணவர்களை தற்கால உலகிற்கு ஏற்ற வாறு அறிவுரை வழங்கி, ஆற்றலை ஊட்டுவதற்கு அதிபரும் ஆசி ரியர்களும் வழிநடத்திச் செல்வது அவசியமாக உள்ளது. அத்தோடு நவீன உலகிற்கு ஏற்றவகையில் பல்வேறு சவால்களிற்கு முகம்கொடுக்கக்கூடிய அறிவு, சுய ஒழுக்கம், தன்னம்பிக்கை, தொழில்நுட்ப மற்றும் புத்தாக்கத்திறன் என்பவற் றைக் கொண்ட நற்பழக்கவழக்கமுடைய மாணவ சமுதாயத்தை உருவாக்கு வதனை இலக்காகக் கொண்டு கல்வி உலகிற்கு தன்னை அர்ப் பணித்துச் செயற்பட்டு ஓர் முன்னுதாரணமான பாடசாலையாக மிளிர வேண்டும் என்பதே எனது பேரவா.

இந் நூற்றாண்டு மலரானது மாணவர்களின் ஆக்கங்களையும் மாணவர் களின் தேடல்களையும் தாங்கி வரவேண்டும் என்பதுடன் இப் பாடசாலைக் காக அல்லும் பகலும் உழைத்த அதிபர்களையும், ஆசிரியர்களையும், பழைய மாணவர் சங்கம், மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் என்பவற்றை பாராட்டுவதோடு மலர் வெளியீடு சிறப்புற அமைய எனது நல்லாசிகளையும் வழங்குகின்றேன்.

**இ. இளங்கோவன்,**
செயலாளர்,
கல்வி பண்பாட்டலுவல்கள்
விளையாட்டுத்துறை அமைச்சு, வடகாணம்.

# கல்வித் தொண்டாற்றும் கலாலயம்




நூறு ஆண்டுகள் கல்வித் தொண்டாற்றிய கலாலய மாக யா/கரணவாய் தாமோதர வித்தியாசாலை விளங்கு கின்றது. இப் பாடசாலையைச் சூழவுள்ள பலரும் இங்கு கல்வி கற்று இலங்கையிலும், சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளிலும் ஆசிரியராகவும், வேறு தொழில்களையும் புரிந்துகொண்டமையை இப் பாடசாலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் பழைய மாணவர் கள் கூறி அறியக் கூடியதாக உள்ளது. இப் பாடசாலையின் அயலில் வாழ்ந்த பெரியவரால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையில் அவரை அன்போடு பலராலும் அப்பா என அழைக்கப்படும் பெயரான அப்பா பாடசாலையாக இருந்தது. சிரேஷ்ட வகுப்புக்களுடன் பல தசாப்தங்களுக்கு முன்பு இயங்கிய இப் பாடசாலை யில் பண்டித, பாலபண்டித சைவப் புலவர்களை உருவாக்கியமை அறியக் கூடியதாக உள்ளது. அறுபதுகளின் பின் பகுதியில் இது தரம் 5 வரை உள்ள ஆரம்பப் பாடசாலையாக ஆனது. இருப்பினும் இப் பாடசாலையிற் கல்வி கற்ற மாணவர்கள் தரம் 5 புலமைப் பரிசிற் பரீட்சையில் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்று இப்பாடசாலையின் பெருமையை நிலைநாட்டினர். இங்கு கற்ற மாணவர்கள் மேல் வகுப்புக்களை ஏனைய உயர்தர பாடசாலை யிற் கற்று வைத்தியர்களாகப், பொறியியலாளராக, ஆசிரியர்களாக ஏனைய சிறப்பான நிலையில் இருப்பதை புள்ளி விபரங்கள் காட்டுகின்றன. எனவே இவர்களது கல்விக்கு அத்திவாரமாக அமைந்தது யா/கரணவாய் தாமோதர வித்தியாசாலை வழங்கிய கல்வித் தானமாகும். இத்தகைய இச் சிறப்பான நிலைமைகளை உருவாக்கிய இங்கு கற்பித்த சேவையாற்றிய அதிபர், ஆசி ரியர்களை வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகிறேன். இப் பாடசாலையின் நூற் றாண்டு விழாவில் கடமையாற்றும் அதிபரும், ஆசிரியர்களும் ஆற்றும் சேவை அளப்பரியது. அதிபர் திரு. சி. குருகுலலிங்கத்தின் வழிகாட்டலில் ஆசிரியர் கள் அர்ப்பணிப்பான சேவையாற்றுவது வெளிப்படை. அதிபர் திரு. சி. குரு குலலிங்கத்தையும், ஆசிரியர்களையும் பாராட்டுவதுடன் பாடசாலை அபி விருத்தி சங்கத்தினர், பழைய மாணவர் சங்கத்தினரின் அயராக உழைப்பை யும் பாராட்டி வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றை நிலைமுனியாது கற்கை நன்றே"

**வே. தி. செல்வரத்தினம்**
பிரதிச் செயலாளர்,
கல்வி பண்பாட்டலுவல்கள்
விளையாட்டுத்துறை அமைச்சு,
வட மாகாணம்.

# தரணி போற்று தாமோதரமே வாழி! வாழி!



"பத்துத் தசாப்தம் பழுதுறாப் பணி செய்து
எத்திசையிலும் புகழ் பரப்பும் ஏந்தல்களை உருவாக்கி
அப்பா பள்ளி" எனும் தோன்றா நாமத்துடன்
தரணி போற்றும் தாமோதரமே வாழி! வாழி!

"அப்பா பள்ளிக்கூடம்" எனும் நாமம் சூட்டி கரணவாய், நவிண்டில் வாழ் பெரியோர்களால் வாஞ்சையோடு அழைக்கப்படும் தாமோதர வித்தியா லயத்தின் நூற்றாண்டு விழா மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.


1911ஆம் ஆண்டு சிறியதொரு பள்ளிக்கூடமாக ஆரம்பிக்கப்பட்ட "தாமோதர வித்தியாலயம் காலவோட்டத்தில் சி.பா.த.ப. வகுப்பு வரையும் (S.S.C) உள்ள அறிவாலயமாக வளர்ச்சி பெற்றது. இவ்வித்தியாலயத்தில் சி.பா.த.ப. வகுப்பு வரை (S.S.C) கல்வி கற்ற பலர் இன்றும் எம்மத்தியில் வலம் வருகின்றனர். இப்பள்ளிக்கூடத்திற்கு அண்மையிலுள்ள இடைநிலைப் பாட சாலைகளின் நலன்கருதிப் பிற்காலத்தில் இப்பாடசாலையின் இடைநிலை வகுப்புக்கள் கைவிடப்பட்டன. இதனூடு "தாமோதரா" தலை சிறந்தவோர் ஆரம்பப்பள்ளியாக உருமாறியது. இம்மாற்றத்தின் விளைவாக தாமோதர வித்தியாலயம் தரம் 5 புலமைப்பரிசிற் பரீட்சையிற் சாதனை படைக்கும் ஆலயமாக மாறியது. இவ்வாலயத்தில் இடப்பட்ட பலம் வாய்ந்த அத்தி வாரமே பிற்காலத்தில் பலர் உயர்கல்வி பெற உதவியது.

தாமோதராவின் பத்துத் தசாப்த காலக் கல்விச் சேவையால் கூர்ப் படைந்த பெரியோர்கள் பலர் இத்தகைய கூர்ப்புக்கு வழிகாட்டிய ஆசிரியர் கள், அச்சாணியாக இயங்கிய அதிபர்கள் நூற்றாண்டு விழாக்காலத்தில் நினைவுகூறப்பட வேண்டியவர்கள். இம் மேன்மக்களின் அயராத உழைப்பே இப்பாடசாலைச் சமூகத்தின் மேலெழுந்த வளர்ச்சியாகும்.

நூற்றாண்டு விழாக்காணும் தாமோதர வித்தியாலயம் மேலும் பல்லாண்டுகள் கல்விப் பணியாற்றிச் சமூகத்தை வலுவூட்ட வாழ்த்துகின்றேன்.

**வ. செல்வராசா**
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வடமராட்சி.

# பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி



வடமராட்சி நவிண்டில் கரணவாய் தாமோதர வித்தியாலயத்தின் நூற் றாண்டு விழாவும், பரிசளிப்பு விழாவும் நடைபெறுவதையிட்டு நான் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். வடமராட்சி கல்விப் பாரம்பரியத்தில் கல்விசார் பெரு மக்களையும், அறிஞர்களையும் உருவாக்குவதில் இப்பிரதேசத்தின் ஆரம்ப பாடசாலைகள் அடித்தளமிட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். வடமராட்சி பிரதேச மக்கள் கடின உழைப்பும், விடாமுயற்சியும் கொண்டிருப்பதுடன் கிராமப்பற்றுடனும் சமூகப்பற்றுடனும் பிரதேச பாடசாலைகளில் தமது மாண வர்களை இணைத்து அவற்றின் கல்வி வளர்ச்சியில் தூரநோக்குடனும், உயிரப்புடனும், அர்ப்பணிப்புடனும் உருவாக்கிய கல்வி பாரம்பரியம் இப்பிர தேசத்திற்கு மட்டுமல்லாது தேசிய ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் பல சாதனையாளர்களை உருவாக்கிய பெருமை வரலாற்று பதிவுகளாக உள்ளது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

இவ்வரிசையில் "அப்பா பள்ளிக்கூடம்" என அனைவராலும் அழைக்கப் படும் கரணவாய் தாமோதர வித்தியாலயமும் தனது உயர்வான பங்களிப் பினைச் செலுத்தி வரலாற்று பதிவாக இடம்பெற்றிருப்பது பெருமைக்குரிய தாகும். மக்கள் கல்வியறிவு ஒழுங்கவிழுமியங்கள் சமூக விழிப்புணர்வுகள் உடையவர்களாக உருவாக்கப்பட வேண்டுமென்ற உயரிய நோக்கில் அக்காலத் தில் வாழ்ந்த சமூகப் பெருந்தகைகளினால் மேற்கொள்ளப்பட்ட தூரநோக் குடைய அர்ப்பணிப்பு மிக்க பணியாக பல பிரதேசங்களில் பாடசாலைகள் உருவாக்கப்பட்டமை இன்று உயர்ந்து வளர்ந்திருக்கும் கல்வி பாரம்பரியத் தின் அடிப்படை என்பதனை எமது எதிர்கால சந்ததியினர் என்றென்றும் நன்றியுடன் நினைவு கூறவேண்டியவர்களாகவுள்ளனர்.

புகழ்பூத்த கல்விமான்களையும் அறிஞர்களையும் சமூகநோக்குடைய பெருந்தகைகளையும் உருவாக்கியுள்ள இப்பாடசாலை சகல துறைகளிலும் வளர்ச்சியடைந்து நற்பண்புகளும் உயர்ந்த சமூக விழுமியங்களையும் கொண்ட சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென வாழ்த்துவதுடன் இதன் உருவாக்கத்திலும் வளர்ச்சியிலும் பங்காற்றிவரும் இப்பாடசாலை கல்விச் சமூகத்திற்கு எனது பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

***சி. சத்தியசீலன்,***
பிரதேச செயலர்,
கரவெட்டி.

## யா/ தாமோதர வித்தியாலய நூற்றாண்டு விழாவிற்கான வாழ்த்துச் செய்தி கரவெட்டிக் கோட்டக் கல்விப் பணிப்பாளரிடமிருந்து....



யா/ தாமோதர வித்தியாலயம் என்னும் கல்விக் கூடம் நூறு ஆண்டு களை பூர்த்தி செய்து பணியாற்றி வருவதையிட்டு பெரு மகிழ்வடைகின்றேன். நூற்றாண்டு விழாவையெட்டி வெளிவரும் சிறப்பு மலர் பாடசாலையின் மகத்துவத்தை வெளிக்காட்டி நிற்கின்றது.

இவ் வித்தியாலயத்தினை தற்போதய பயனுறுதியுடனும் அதிபர் வினைத்திறனுடனும் நிர்வகித்து வருவது பாடசாலை சகல துறைகளிலும் பிரகாசித்து உயர்ந்த கல்விச் சாதனைகளை அடைவதற்கு துணைபுரிகின்றது. அத்துடன் வித்தியாலய வளர்ச்சிக்கு ஆசிரியர்கள் பழையமாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், நலன் விரும்பிகளது பங்களிப்பும் துணைநிற்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு நாட்டின் வளங்களுள் முதன்மையானதும், அழிவடையாததும் சமூக அசைவியக்கத்தை ஏற்படுத்துவதுமான செல்வம் கல்விச் செல்வமாகும். மனிதன் தோன்றிய காலம் கல்வியும் அவனது வாழ்க்கையில் ஒரு அங்கமாக உள்ளது. கல்வியின் ஊடாக பல நோக்கங்கள் எதிர்ப்பாக்கப்படுகின்றன. அறிவு விருத்தி, முழுவாழ்வுப் பயன், அறத்தையும் ஒழுக்கத்தையும் விருத்தி செய்தல், உகந்த நற்பிரஜைகளை உருவாக்குதல். ஆன்ம ஈடேற்றம், வாழ்க்கைக்கு வழிசமைத்தல் போன்றவற்றில் பலவற் றையோ, ஒன்றையோ நிறைவு செய்வதாக அமைகின்றது.

மனிதனுள் புதைந்திருக்கும் பூரணத்துவத்தை வெளிப்படுத்துவது கல்வி மாணவர்களை உற்சாகப்படுத்தி, மனக்களைப்பைப் போக்கி கற்பிப்பதனால் கற்றல் வெற்றி பெறுகின்றது. இதற்கு ஆரம்பக்கல்வி ஆசிரியர்களின் முயற்சி முக்கியமானதாக அமைகின்றதென சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளார்.

எனினும் ஒரு கல்விக் கூடமானது இவ்வாறான கடமைகளிலிருந்து விலகும்பொது அது சமூகத்தின் வீழ்ச்சிக்கு காரணமாகின்றது. எனவே கல்வியுடன் இணைப்பாடவிதானமும் சிறந்து வளர்ந்து இப்பாடசாலை முதன்மை பெற சகலரது ஒத்துழைப்பும் வேண்டப்படுகின்றது.

எத்தகைய கல்வி நல்ல ஒழுக்கத்தை உருவாக்குமோ, மனவலிமையை வளர்க்கச் செய்யுமோ, விரிந்த அறிவை தருமோ, ஒருவனை தன்னுடைய சுயவலிமையைக் கொண்டு நிற்கச் செய்யுமோ அத்தகைய கல்வி தான் நமக்கு வேண்டுமென சுவாமி விவேகானந்தர் கூறியதற்கு அமைய இவ் வித்தியாலயம்

இக் கல்விப் பணியை மேலும் ஆற்றி இன்னும் பல வளர்ச்சிப் படிகளையும், வெற்றிகளையும் கண்டு வளமாக வளர்ந்தோங்க எனது மனமார்ந்த வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

**திரு. சி. நற்குணலிங்கம்**
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
கரவெட்டி.

# கரணவாய் தாமோதர வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளரின் ஆசி உரை



எமது பாடசாலை நீண்ட வரலாற்றுப் பாரம்பரியம் உடையது. நாவலர் வழியில் கிறிஸ்தவ சமயத்திற்கு எதிராக சைவத்தையும் தமிழையும் கட்டிக்காத்த பரம்பரையில் அமரர் தாமோதரம்பிள்ளையின் தனிப்பட்ட முயற்சியினால் உருவாக்கப்பட்ட இப்பாடசாலை நூற்றாண்டு விழா கொண்டாடுவதை இட்டு அகமகிழ்கின்றேன் ஆரம்பித்த நாள் தொடக்கம் இற்றை வரை எவ்வித இடையூறுமின்றி சைவப் பாரம்பரியத்தை பாதுகாத்த ஒரே பாடசாலை இதுவாகத்தான் இருக்கமுடியும். இதை இட்டு நாம் பெருமிதப்பட வேண்டி உள்ளது. ஒரு கிராமத்தின் வளர்ச்சி எழுத் தறிவுள்ளோரின் தொகையிலேயே தங்கி உள்ளது. எமது பாடசாலையில் படித்த பல்லாயிரக் கணக்கான மாணவர்கள் சிறந்த கல்வியியலாளராக வந்துள்ளனர். உடுப்பிட்டி அ.மி. கல்லூரி, ஹாட்லிக்கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் உயர் நிலைக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி இவற்றில் எம் பாடசாலை மாணவர்களே உயர்தர வகுப்பில் கல்விகற்றுக் கொண்டு வருகின்றனர். கல்வி விலை கொடுத்து வாங்கும் பொருள் அல்ல அது எம்முடனே இயல்பாக வளர வேண்டும். ஆகவே இப் பாடசாலை நூற்றாண்டு விழாவைக் கண்ட பொழுதி லும் அதன் எதிர்காலம் மேலும் சிறப்படைய என்னுடைய நல்வாழ்த்துக்கள்.


**ந. செல்வநாயகம்** B.Sc.
செயலாளர்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

கரணவாய் தாமோதர வித்தியாலயம்
கரணவாய்.



பாடசாலை நூற்றாண்டு விழாக் குழு..

# நூற்றாண்டு விழாசபை தலைவனின் உள்ளத்திலிருந்து



புகழ்பூத்த கரணவாய் மண்ணிலே எமது பேரன் திரு. இ. தாமோதரம்பிள்ளை அவர்கள் நிறுவிய இப் பாடசாலையானது நூற்றாண்டு விழா காண்பதையிட்டு நாம் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இச்சந்தர்ப்பத்தில் நூற்றாண்டு விழா மலர் மலர்வதையிட்டு நூற்றாண்டு விழா சபையின் சார்பில் எமது வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்து கொள் கின்றேன். மேலும் இம்மலர் மலர்வதற்கு பல வழிகளிலும் ஆக்கங்களையும் ஊக்கங்களையும் தந்துதவியவர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

அத்துடன நூற்றாண்டு விழா கொண்டாடும் இத்தருணத்தில் இவ்வருடம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 12 மாணவர்களுக்கும் அதிபர் திரு குருகுலசிங்கம் அவர்களுக்கும் கற்பித்த ஆசிரியர்களுக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கின்றேன்.

இப்பாடசாலையில் ஆரம்ப கல்வி கற்று இன்று பல்வேறுதுறைகளிலும் பெரும்பதவிகளில் பலர் இருக்கின்றனர். அவர்களைப் போல் மேலும் பலரை இப்பாடசாலை உருவாக்க எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திப்போமாக.

**திரு. ம. குகதாசன்**
தலைவர்
நூற்றாண்டு விழா சபை

## நான் கண்ட – காணும்
## கரணவாய் தாமோதரவித்தியாலயம்



இந்தக் கல்வித் தாய்க்கு நூற்றாண்டுவிழா எடுக் கப்படும் கட்டத்தில் இதனை நிறுவிய பெருமைக்குரியவரின் மூத்த பேரப்பிள்ளை என்ற அங்கீகாரத்துடன் நான் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டிருக்கிறேன். அப்பெருமையை என் உரிமையாக்கிய என் தந்தையின் தந்தையை நினைந்து போற்றி அன்னாருக்கு முதற்கண் அஞ்சலி செலுத்தக் கடமைப்பட்டிருக் கின்றேன்.

"பணக்காரப்பா" என்று ஊரரால் போற்றப்பட்ட என் பேரன் திரு. தாமோ தரம்பிள்ளை இக்கல்விக் கூடத்தை தீர்க்கதரிசனத்துடன் 1911இல் ஆரம் பித்தார். அவரின் காலத்தின் பின் என் தந்தை திரு. இராமலிங்கம் அப்பாட சாலையின் நிர்வாகத்தை பொறுப்பேற்று நடத்தினார். என் தந்தையின் மறைவை யடுத்து 1956 முதல் அரசாங்கம் பாடசாலையை 1962இல் சுவீகரிக்கும்வரை என் மாமனார் திரு. பொ. கணபதிப்பிள்ளை அந்தப் பொறுப்பை ஏற்றிருந்தார்.

தானங்களில் எல்லாம் சிறந்த தானம் கல்வி என்று பெரியோர்கள் எடுத்துக்காட்டியிருக்கின்றார்கள். அந்தப் புண்ணிய கைங்கரியத்தின் பயனாக இப்பாடசாலையின் நிறுவனரின் மூத்த புதல்வனாக எனது தந்தை திரு. இராமலிங்கத்தை 1947லும் 1952லும் பருத்தித்துறைத் தொகுதியின் பிரதிநிதியாக வடமராட்சி மக்கள் நாடாளுமன்றத்திற்கு அமோக ஆதரவுடன் தெரிவுசெய்து அனுப்பியமை குறிப்பிடற்பாலது.

எமது மண்ணில் அந்நிய ஆட்சிக்கு அடிபணியாது ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தி தமிழையும் சைவத்தையும் பேணிப்பாதுகாத்த பெருமை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானுடையதாகும்.

நாவலர் பெருமான் 1868 இலும் 1870 இலும் வெளியிட்ட விக்ஞாப்பியத்தில் தாம் செயற்படுத்த இருக்கும் செயற்திட்டங்களை எடுத்துரைத்திருக்கிறார்.

தமிழ்க் கல்வியும் சைவசமயமும் அபிவிருத்தியாதற் கருவியாக முக்கிய ஸ்தலந்தோறும் வித்தியாசாலைகளை ஆரம்பித்தல்.

நல்லொழுக்கமும் விவேகமும் கல்வியில் விருப்பமும் இடையறா முயற்சியும் ஆரோக்கியமுடைய உபாத்தியாயர்களை உருவாக்குதல்.

எனும் இரு முக்கிய செயற்திட்டங்கள் அந்த விக்ஞாப்பியத்தில் அடங்கியிருந்தன.

எமது ஊரில் இந்த செயற்திட்டங்களுக்கு உயிரும் உருவமும் தந்தவர் 'பணக்காரப்பா' யாழ்ப்பாணத்தில் வடமராட்சி மண்ணின் பெருமைக்கு மகுடம் வைத்தால் போல விளங்குவது கல்விமான்களை உருவாக்கிய சிறப்பு. வடமராட்சி பலரைப் பலதுறையில் விற்பன்னர்களாக - குறிப்பாக பல ஆசிரியர்களை - உருவாக்கிய பெருமை இந்த மண்ணுக்கு உடையதாகும். அந்தப் பாரம்பரிய வளர்ச்சிக்கு இப்பாடசாலையும் தன்பங்கை அளித்திருக்கிறது என்றால் மிகையாகாது. நான் கூட எனது கல்வியின் ஆரம்பமாக முதலாவது மூன்று அண்டுகள் இப் பாடசாலையில் கற்றேன் என்ற உரிமையும் பெருமையும் எனக்கும் உண்டு.

பண்டிதர் கந்தவனம் இப்பாடசாலையை வளர்ப்பதில் மிகவும் பாடுபட்டு உழைத்தவர். அவரின் சேவைக்காலம் இக் கல்லூரியின் பொற்காலம். செல்லையா உபாத்தியார், பண்டிதர் கந்தையா நாகரத்தினம், சந்திரசேகரம், பொன்னம்பலம், சே. கந்தையா போன்ற பல புகழ் பூத்த ஆசிரியர்கள் இப்பாடசாலையின் வளர்ச்சிக்காக அயராது உழைத்த பெருமக்கள்.

கால ஓட்டத்தில் இம் மண்ணில் ஏற்பட்ட பல மாற்றங்ள், தாக்கங்கள், காரணமாக இன்று இப்பாடசாலை ஓர் ஆரம்ப பாடசாலையாக இருந்தாலும் இது இக்கிராமத்தின் ஓர் அத்தியாவசிய அங்கம், இதன் வளர்ச்சி கரணவாய் மண்ணுக்கு தேவை, என்பதனை மறவாது மீண்டும் இதனை கட்டியெழுப்பி பெருமை சேர்ப்பதே இந்த நூற்றாண்டு விழாவில் இப்பாடசாலையை நிறுவிய பெருமகனுக்கும் இதன் வளர்ச்சிப்பாதையில் தங்களின் தடங்களைப் பதித்த உத்தமர்களுக்கும் நாங்கள் செலுத்தக் கூடிய சிறந்த அஞ்சலியாகும்.


பிரதம விருந்தினர்
**இ. பொன்னம்பலம்**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

# நிறுவுனர் தாமோதரம் பிள்ளையும் பாடசாலையின் வரலாற்றுப் பின்னணியும்

மனித அறிவு வளர்ச்சிப் படிகளாக பல காரணிகள் இருப்பினும் அவை எவையும் கல்விபோல ஆற்றல் வாய்ந்தவை அல்ல என்பது வெள்ளிடைமலை இறந்த காலங்களை மீட்டிப் பார்க்கும்பொது இக் கிராமத்தின் செல்வந்தர் பணக்காரப்பா என பெருமையுடன் வாழ்ந்த இராமலிங்க நினைவுகொள்ளப்படுகின்றார். மனித நேயமும் கருணை உள்ளமும் கொண்ட அப்பெரியாரின் மூத்த பிள்ளையாக 20.06.1872இல் தாமோதரம்பிள்ளை பிறந்தார். இவரது ஆரம்பக் கல்வியை புலமைத்துவம் வாய்ந்த பின்னணி வளர்த்தது. உயர்கல்வி கற்பதற்கு இலங்கையில் கல்வி நிறுவனங்கள் எதுவும் காணப்படவில்லை. இதனால் பலரும் அக் காலத்தில் கல்விக்கு இந்தியாவையே நம்பி இருந்தனர். சென்னையிலுள்ள பிரபல்லியம் வாய்ந்த கிறிஸ்ரியன் கல்லூரியில் சட்டத்துறையில் கல்வி கற்று பட்டம் பெற்றார். பிரசித்த நொத்தாரிசு ஆகவும் நியாய துரந்தரராகவும் பணியாற்றி கிராமத்திற்குப் புகழ் சேர்த்தார்.

சமூகப் பணியில் ஈடுபாடு கொண்ட இப்பெரியார் சைவத்தையும் தமிழையும் தனது இரு கண்கள் போலக் காத்தவர் கரணவாயிலும் அதை அண்டிய பிரதேசங்களிலும் வாழ்ந்த சிறுவர்கள் கல்வி கற்பதற்கு உடுப்பிட்டி அடிமரிக்கன் மிஷன் கல்லூரியை நாடவேண்டி இருந்தது. அக்கல்லூரி தென் இந்திய திருச்சபையால் நடாத்தப் பெற்றது. அத்துடன் அது இருமொழிப் பாடசாலையாக விளங்கியது. எனவே தம் கிராமத்துப் பிள்ளைகளின் நலன் கருதியும் மதமாற்றத்தைத் தடுக்கும் பொருட்டும் தனக்குச் சொந்தமான நிலப்பரப்பில் ஒரு பாடசாலையை அமைத்துக் கொண்டார். சைவ வித்தியாசாலை என்ற பெயரில் 1911ஆம் ஆண்டு இக்கல்விக் கூடத்தை ஆரம்பித்து வைத்தார். சைவ பண்பாட்டையும் கலாசாரத்தையும் பேணும் நோக்குடன் பாடசாலைக்கு வரும் சிறுவர்கள் சீருடை அணிய வேண்டி இருந்தது. ஆண்பிள்ளைகள் வேட்டி சட்டையும், பெண் பிள்ளைகள் நீளப்பாவாடை சட்டையும் அணிய வேண்டுமென்ற கண்டிப்பான நடைமுறை அங்கே இருந்தது.

ஆரம்பத்தில் சிரேஷ்ட இடநிலை வகுப்புவரை போதிக்கப்பட்டு வந்தது. 1960ஆம் ஆண்டு அரசாங்கம்பாடசாலைகளை சுவீகரிக்கும் திட்டத்தினை அமுல் நடாத்தியபோது இப்பாடசாலை கனிஷ்ட ஆரம்பப்பாடசாலையாக மாற்றப்பட்டது. இதேவேளை இன்னுமொரு விடயத்தை கவனத்தில் கொள்ளவேண்டி உள்ளது. நம் கிராமத்துக்கு கல்விச் சுடர் ஏற்றி வைத்த இப்பாடசாலையின் நிறுவுனர் தாமோதரம்பிள்ளை அவர்கள் 05.05.1941இல் இறைபதம் அடைந்தார். பாடசாலையில் கல்வி கற்ற பிள்ளைகளின் பெற்றோர்களும் பழைய மாணவர்களும் நலன் விரும்பிகளும் சைவ வித்தியாசாலை. என்ற பெயரை மாற்றி கரணவாய் தாமோதர வித்தியாலய மென பெயர் சூட்டப்பட வேண்டும் என விரும்பினர். இவர்களது கோரிக்கை பாடசாலை வரலாற்றின் ஓர் திருப்பு மையம் 1965ஆம் ஆண்டில் கல்வித் திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்று தொடக்கம் இற்றைவரை தாமோதரவித்தியாலயமென்றே அழைக்கப்பட்டு வருகின்றது.



தாமோதர வித்தியாலய ஆரம்ப காலத் தோற்றத்துடன் ஆரம்பக்கால அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்

பாடசாலையின் பெயர் மாற்றப்பட்ட வேளையில் திரு. செல்லையா அவர்களே அதிபராகப் பணியாற்றினார். அதனைத் தொடர்ந்து பல அதிபர்கள் கடமையாற்றி இருந்த போதிலும் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக அதிபர்கள் பற்றிய தகவல்களை எடுக்கமுடியவில்லை. ஒருபாடசாலையின் வளர்ச்சி அதிபரிடமே தங்கி உள்ளது. பாடசாலையின் வரலாற்றுப் பின்னணியில் கல்வி வளர்ச்சியை முன்னெடுத்துச் சென்ற அதிபர்கள் வருமாறு:


| | |
|---|---|
| **திரு. மா. சுப்பிரமணியம் அவர்கள்** | (1962.05.01 - 1971.06.14) |
| **திரு. இ. தம்பிராசன் அவர்கள்** | (1971.06.15 - 1979.12.05) |
| **திருமதி சி. சின்னம்மா அவர்கள்** | (1979.12.06 - 1980.03.04) |
| **திரு. க. சோமசுந்தரம் அவர்கள்** | (1980.03.05 - 1981.05.01) |
| **திரு. மு. மயில்வாகனம் அவர்கள்** | (1981.05.02 - 1982.11.16) |
| **திருமதி தி. சின்னம்மா அவர்கள்** | (1982.11.17 - 1983.12.01) |
| **திரு. ந. வயித்தியநாதர் அவர்கள்** | (1983.12.02 - 1993.01.29) |
| **திரு. ம. ஆறுமுகம் அவர்கள்** | (1993.01.30 - 1993.06.29) |
| **திரு. ஐ. நடராசா அவர்கள்** | (1993.06.30 - 2002.10.16) |
| **திரு. ம. ஆறுமுகம் அவர்கள்** | (2002.10.17 - 2002.12.31) |
| **திருமதி பாகியராஜா அவர்கள்** | (2003.01.01 - 2006.01.19) |
| **திரு. சி. மகேந்திரன் அவர்கள்** | (2006.01.20 - 2006.02.09) |
| **திரு. ம. மகேஸ்வரராஜா அவர்கள்** | (2006.02.15 - 2010.06.14) |

தற்போதைய அதிபரான குருகுலலிங்கம் நிறுவுனர் தாமோதரம்பிள்ளை என்ன நோக்கத்திற்காக இப்பாடசாலையை ஆரம்பித்தாரோ அதை நிறைவேற்றுவதில் சாதனை படைத்துள்ளார். அறத்கு இவ்வாக்கு நடைபெற்று முடிந்த புலமைப் பரிசில் பரீட்சையின் பன்னிரண்டு மாணவர்கள் தேர்ச்சி அடைந்த தாமோதரம்பிள்ளை நினைந்து நினைந்து புளகாங்கிதம் கொள்வார் என்பதில் ஐயமில்லை. மேலும் தற்போதைய அதிபர் வலயக் கல்விப்பணிப்பாளர் மாகாணக் கல்விப் பணிப்பாளருடன் நல்லுறவை ஏற்படுத்தி பாடசாலையின் பௌதீகவள அபிவிருத்திக்கு அயராது உழைத்து வருகின்றார். அவர் அமைத்த கணனி அறையின் ஐந்து கணனிகளும் இதற்கு சான்று பகரும்.


பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினது நல்லாதரவை அவர் பெற்றிருக்கின்றார். பெற்றோர்கள் பாடசாலை ஒரு சமூக நிறுவனம் என்ற வகையில் உழைத்து வருகின்றனர்.

எல்லாக் கல்லூரிகளிலும் நிறுவுனர் நினைவு தினம் பாடசாலை பரிசில் நாளாகக் கொண்டாடப்படுகின்றது. எமது கல்விச் சமூகமும் இதனை மனதில் கொண்டு தொழிற்பட வேண்டியது அவசியம். "கற்க மறுப்பவன் வாழ மறுக்கின்றான்" என்ற இராமகிருஷ்ணரின் பொன்மொழியை நினைவு கூர்ந்து நிறுவுனரின் பணியை மேலும் ஒளிவிட்டுப் பிரகாசிக்கச் செய்வோம்.

# வித்தியாலயத்தில் வழி நடத்திய முன்னாள் அதிபர்கள்



திரு மா.சுப்பிரமணியம்



திரு இ.தம்பிராசன்




திருமதி சின்னம்மா திருநாமம்



திரு நல்லையா வைத்தியநாதர்



திரு ம.ஆறுமுகம்



திரு ஐயாத்துரை நடராசா



திருமதி சுதாநாயகி பாக்கியராஜா




திரு சின்னையா மகேந்திரன்




திரு மதுவேற்பிள்ளை மகேஸ்வரராஜா

# வித்தியாலயத்தில் பணியாற்றிய ஆசிரிய மணிகள்...



திரு கந்தையா




திரு சிவசிதம்பரம் சந்திரசேகரம்பிள்ளை



திரு R.D.மயில்வாகனம்



திரு சின்னத்துரை விசுவலிங்கம்



திரு சின்னையா கந்தசாமி



பண்டிதர் வேலுப்பிள்ளை கந்தவனம்



திரு. தாமோதரம்பிள்ளை சிவகுருநாதன்



திருமதி மயில்வாகனம் வல்லிபுரநாதர்



திருமதி யோகநாதன் நல்லநாயகி

## வித்தியாலயத்தில் பணியாற்றிய ஆசிரிய மணிகள்...



திருமதி பரமேஸ்வரி சரவணமுத்து



பண்டிதர் க.முத்துவேலு



செல்வி இந்திராணி தம்பாப்பிள்ளை



திருமதி பாக்கியம் சரவணமுத்து




திருமதி இரத்தினேஸ்வரி கிருஸ்ணபிள்ளை




திரு ஆ.க.மாணிக்கம்



திரு கந்தையா மாணிக்கம்




திரு கந்தையா பொன்னம்பலம்



திரு கணபதிப்பிள்ளை சிவபாதம்

## வித்தியாலயத்தில் பணியாற்றிய ஆசிரிய மணிகள்...


திரு. சின்னத்தம்பி செல்லையா


இரத்தினசோதி இந்திராணி


திருமதி மாலினி நாகேஸ்வரன்


திருமதி செல்லமாபத்தினி சிவம்


திருமதி மாணிக்கம் ஜெகநாதன்


ஜெ. மீரா


திருமதி சிவரஞ்சினி சச்சிதானந்தமூர்த்தி


திரு. சோமாஸ்கந்தர் வாகீசன்


திருமதி தேன்மதி வசந்தராஜா

## வித்தியாலயத்தில் பணியாற்றிய ஆசிரிய மணிகள்...



திருமதி சிவமாலினி உதயகுமார்



ம. கோமகள்



தமிழ்ச்செல்வி



திருமதி வினோதினி சயேசன்



செல்வி ஹேமலக்ஷ்மி அரியரட்ணம்



திருமதி ஜெயமணி சிவநடராஜா



செல்வி இராஜசுலோஜனா அமிர்தலிங்கம்



திருமதி சந்திராதேவி பாலேந்திரன்



செல்வி வாசுகி மாணிக்கவாசகர்

## வித்தியாலயத்தில் பணியாற்றிய ஆசிரிய மணிகள்...



திருமதி சுகிர்தா திவாகரன்

## 2011 ஆம் ஆண்டு கடமையில் உள்ள ஆசிரிய மணிகள்...

அதிபர் : திரு. சி. குருகுலலிங்கம்

ஆசிரியர் : திரு. தி. கணேஸ்வரன்

ஆசிரியர் : திரு. சி. பொன் சிவநேசன்

ஆசிரியை : திருமதி சுகந்தினி பாக்கியநாதன்

ஆசிரியை : செல்வி. தியாகராஜா ஜெலீனா

ஆசிரியை : செல்வி. நந்தினி சந்திரமூர்த்தி

ஆசிரியர் : திரு. சு. மகாதேவா

# இறை உணர்வின் விஞ்ஞான அடிப்படை

கலாநிதி சிவக்கொழுந்து ஸ்ரீசற்குணராசா
கணித புள்ளிவிபரவியற் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## 1. ஒப்பற்ற விஞ்ஞானி

அற்புதமான இந்த பிரபஞ்சம் பற்றி அமைதியாக சிந்திப்போமாயின், இவ்வுலகம் அளவற்ற பக்தித்திறனால் இயக்கப்படுவதை உணருவோம். இயக்குநர் அன்றி எந்த ஒரு இயந்திரமும் இயங்குவதில்லை, தானாக இயங்கும் இயந்திரங்களைப் படைத்ததாக விஞ்ஞானிகள் பெருமிதம் அடைகின்றனர். ஆனால் அத்தகைய இயந்திரங்கள் கூட விஞ்ஞானிகளின் புத்திக்கூர்மையினாலேயே இயங்குகின்றன. இயற்கையின் இயக்கங்கள் அனைத்தும் சீராக அமைந்திருக்கின்றன. 20ம் நூற்றாண்டின் புகழ் பூத்த விஞ்ஞானி அல்பேட் அயன்ஸ்டைன் (Albert Einstein) "இயற்கையின் விதிகளுக்குப் பின்னால் ஒரு களங்கமற்ற பூரண புத்தித்திறன் இருக்க வேண்டும்" என்று ஒப்புக்கொண்டுள்ளார். இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்தும், காத்தும், கட்டுப்படுத்தும் பரமேஸ்வரன் (Supreme controller) ஒரு தலைசிறந்த விஞ்ஞானியும், பொறியியல் வல்லுனரும் ஆவார். அவரது கருணையான மனோசிந்தனைக்கேற்பவே சிருஷ்டி முழுவதும் இயங்குகின்றது. ஸ்ரீகிருஸ்ணர் உரைக்கின்றார்.

"அனைத்து பிரபஞ்சத்தோற்றம் எனது கட்டுப்பாட்டின் கீழேயே இருக்கின்றன. என் எண்ணப்படியே அவை அனைத்தும் மீண்டும் மீண்டும் படைக்கப்பட்டு இறுதியில் அழிக்கப்படுகின்றன."

- பகவத் கீதை அத்தியாயம் ஒன்பது சுலோகம் எட்டு: ப.கீதை 9.8

### 1.1 சில உதாரணங்கள்

கீழ்வரும் உதாரணங்களை நோக்குவதன் மூலம் ஒப்பற்ற விஞ் ஞானியாக இறைவன் உள்ளார் எனத் துல்லியமாக நாம் உணரலாம்.

(அ) அன்றாடம் நாம் பார்க்கும் சூரியனே நமக்கு வெகு அண்மையிலிருக்கும் நட்சத்திரமாகும். இச்சூரியனின் விட்டம் பூமியின் விட்டத்தைவிட நூறு மடங்கு பெரியது. பூமியிலிருந்து 9.3 கோடி மைல்கள் தொலைவில் இருக்கின்றது. சூரியனின் சக்தியில் ஒரு சிறிய பகுதியே பூமிக்கு வருவதாக மதிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆயினும் இந்தச் சிறிய அளவு சக்தி உலகின் எல்லாத் தொழிற்சாலைகளிலும் உபயோகிக்கப்படும் மொத்த சக்தியைவிட பலநூறாயிரம் மடங்கு அதிகமாகும். ஒரு வினாடியில் சூரியனிடம் இருந்து

கிளம்பும் சக்தி ஒரு கிலோவாட் (1 K.W) மின்சார சாதனத்தை 10,000,000,000,000,000 வருடங்களுக்கு இடைவிடாது இயக்கும் திறனுடையது. இன்னொருவிதமாக கூறுவோமாயின் ஒரு வினாடியில் சூரியன் வெளியிடும் சக்தி மனிதகுலம் இதுவரை சரித்திரம் முழுவதும் உபயோகம் செய்திருக்கும் சக்தியைவிட அதிகமானது. நவீன விஞ்ஞானிகள் தமது புத்திக் கூர்மை யினால் மின்சாரம் மற்றும் அணுசக்தி நிலையங்களை உருவாக்கியிருக் கின்றனர். ஆனால் இவற்றின் பிரயோகம் மட்டுப்படுத்தப்பட்ட தன்மை யுடையது.

"இவ்வுலகம் முழுவதும் இருளை விலக்குகின்ற சூரியனின் பிரகாசம் என்னிடமிருந்து வருவதே. சந்திரன், அக்கினி இவற்றின் ஒளியும் என்னிடமிருந்தே வருகின்றன."

ப.கீதை 15.12

அண்ட சராசரங்களில் இருந்து அணுவின் உட்பகுதி வரை, ஜட உலக சிருஷ்டி ஆனது மிகச் செவ்வனே நியமிக்கப்பட்ட கடிகாரத்தைப் போன்று இயற்கை விதிகளுக்கு உட்பட்டு சீராக இயங்குகின்றன. இவை யனைத்தும் பூரணமாகப் படைக்கப்பட்டு, செவ்வனே பராமரிக்கப்படுகின்றன.

"நான் ஒவ்வொரு கிரகத்திற்குள்ளும் நுழைகின்றேன். எனது சக்தியால் அவை தமது சுழற் பாதையில் இயங்குகின்றன. நானே சந்திரனாகி எல்லாத் தாவரங்கட்கும் வாழ்வு ரஸத்தை வழங்குகின்றேன்."

ப.கீதை 15.13

ஒப்பற்ற அறிவுக் கூர்மை படைத்த இறைவனால் நியமிக்கப்பட்டதால் இயற்கை விதிகள் ஒரு பொழுதும் தவறாது செயற்படுகின்றன. தவறாது சூரியன் கிழக்கில் உதித்து மேற்கில் மறைகின்றான். ஒவ்வொரு வருடமும் பருவங்கள் பிறழாது வருகின்றன. அந்த பருவத்திற்குரிய தட்பவெப்ப நிலைகள் தவறாது தோன்றுகின்றன.

(ஆ) இப்பொழுது அணுவின் உட்பகுதியில் இறைவனால் நிய மிக்கப்பட்ட சிருஷ்டியின் சில அம்சங்களைக் கவனிப்போம். மிக எளிய, இரண்டே அணுக்களையுடைய ஐதரசன் அணுக்கூட்டையும் அதேசமயம் சிக்கலான அணுக்கட்டமைப்புக்களைக் கொண்ட புரதங்கள், DNA, RNA போன்ற கரு அமிலங்களைக் காண்கிறோம். புரதங்கள், கருஅமிலங்கள் ஆகியவை உயிருள்ள எல்லா ஜந்துக்களின் உடல்களில் காணப்படும் அடிப்படைத் தாதுக்களாகும். ஒவ்வொரு புரதமும் அல்லது கருஅமிலமும் கணக்கற்ற அணுக்களையுடைய விசேட அமைப்பைப்பெற்று, ஒரு குறிப்பிட்ட செயலைப் புரிகின்றன. இவ்வாறு, விதவிதமான இரசாயனப் பொருட்கள் தமது அணுக்களின் எண்ணிக்கை, மற்றும் வடிவம், இணைப்புமுறை எனப்பல விவரங்களில் மாறுபடுகின்றன. நிலக்கரி, கிராபைட், வைரம் ஆகியவை காபனிலிருந்தே உருவாகின்றன. இருந்தபோதிலும்

வைரம் மிகப்பளபளப்பாக உறுதியோடு விளங்குகின்றது. ஆனால் கிராபைட்டோ கறுப்பாகவும், மிக மிருதுவாகவும் இருக்கின்றது. இவ்வாறு ஒரே தாதுப் பொருட்களிலிருந்து உருவாகும் வெவ்வேறு பொருட்கள் மாறுபட்ட குணா திசயங்களோடு விளங்குவதற்கு அவற்றின் அணுக்களின் அமைப்பில் இருக்கும் வித்தியாசங்களே காரணம். அணுக்களின் எண்ணிக்கை, இணைப்பு முறை ஆகியவற்றைப் பொறுத்து பொருட்களின் தன்மை மாறுகின்றது. இயற்கையில் இதற்கான உதாரணங்களை அளவில்லாது அடுக்கிக் கொண்டே போகலாம். அணுவமைப்புக்கள் மிக அற்புதமான குறிப்பிட்ட அமைப்பில் நேர்த்தியாக சேர்க்கப்பட்டிருப்பதை இயற்கையில் காணும்போது, இரசாயன விஞ்ஞானிகள் இந்த ஏற்பாட்டிற்குப் பின்னால் எவ்வளவு கூரிய புத்தித்திறமை படைத்த ஒருவர் இருந்திருக்க வேண்டுமென்று சிந்திக்காமல் இருக்கமுடியாது.

(இ) சிருஷ்டியில் இறைவனின் கை வண்ணத்தைக்கான இன்னும் சில உதாரணங்களை நோக்குவோம். மனிதப்பிறவிக்கு கீழான சில ஜீவராசிகளின் வாழ்க்கையிலே சமுதாய அமைப்பு செவ்வனே இயங்குவதை நாம் காண லாம். உதாரணமாக தேனீக்களின் சமுதாயத்திலே இராணித் தேனியை மற்ற ஆண் தேனீக்கள் நன்றாகக் கவனித்துக் கொள்கின்றன. வேலையாட் தேனீக்களோ நாள் பூராகவும் மலர்களுக்குச் சென்று தேனைச் சேகரித்துக் கொண்டு வருகின்றன. இவை தமது தேவைக்கும் இதர தேனீக்களின் தேவைக்காகவும் பெருமளவு தேனைச் சேகரிக்கின்றன. இவ்வாறு அமைதி யாகவும் கூட்டாகவும் உழைப்பதன் மூலம் தேனீக்கள் வெகு சிக்கலான காரியங்களைக் கூட எளிதில் புரிகின்றன. சிறிய சிலந்தி மிகச் சிக்கலான வலையைப் பின்னி தன்னுடைய உணவிற்கு பூச்சிகளைப் பிடிக்கின்றது. அதே வலை மூலம் தன்னைப் பாதுகாத்தும் கொள்கின்றது. பட்டுப் பூச்சிகள் புழுப் பருவத்திலிருக்கும் போது, நூற்றுக்கணக்கான மீற்றர்களுக்கு நூல் இழைத்துத் தம் இருக்கைக்காக கூடுகளைக் கட்டிக்கொள்கின்றன. ஆலமரம் எத்தனை பெரிய மரம் அதன் விதையோ கடுகைவிட சிறியதாக இருக் கின்றது. ஆயினும் அந்தச் சிறிய விதைக்குள்ளே ஒரு பெரிய ஆலமரம் உருவாகுவதற்கான சூத்திரம் இருக்கத்தானே செய்கின்றது. இவ்வாறாக பெரியது சிறியது என்று கணக்கில்லா ஜீவராசிகளைப் பரிபாலிக்கும் ஏற்பாடுகளை இறைவன் செய்திருப்பதை நாம் காண்கிறோம்.

"ஓ அர்ச்சுனனே, அனைத்து சிருஷ்டிக்கும் வித்தாக அமைவது நானே. அசைவன அசையாதன என எல்லாவற்றிலும் என்னைச் சாராது சுயேச்சையாக எதுவும் இல்லை."

ப.கீதை 10.39

**2. விஞ்ஞானிகளின் முயற்சிகள்**

இயற்கையில் இறைவன் படைத்திருக்கும் அற்புதமான காரியங்களை விஞ்ஞானிகள் பிரதிபண்ணி தமது உருவாக்கங்களை ஏற்படுத்தி பயன் படுத்துகின்றார்கள். பறவையைப் பார்த்து விமானத்தைப் படைத்தான் மனிதன். பறவைகளைப் போலன்றி விமானம் மேலெழும்புவதற்கு ஓடுபாதை தேவை யாகின்றது. மேலும் மனிதன் ஓடுபாதை தேவையற்ற வானூர்திகளைப் படைத்தான். எப்படியாயினும் மனிதனின் விமானங்களையும் வானூர்திகளை யும் பராமரித்துப் பேண எத்தனையோ பாரிய ஏற்பாடுகளும் மனித வளமும் தேவைப்படுகின்றது. இயற்கையின் ஒரு அற்ப படைப்பான நுளம்பினை எடுத்துக்கொள்ளுங்கள். நுணுக்கமாகப் பறப்பது மட்டுமன்றி தன்னையும் சுயமாகப் பராமரித்துப் பேணுகின்றது. எனவே நடைமுறையில் விஞ்ஞானி களால் இப்பிரதியாக்கலைக்கூட சரிவரச் செய்ய முடிவதில்லை. விஞ்ஞானி களின் முயற்சிகளுக்கு நீண்ட கடின உழைப்பிற்குப் பின் சிறிதளவு வெற்றி கிடைக்கின்றது. விஞ்ஞானிகள் தமது முயற்சிகளில் சிரமத்தை எதிர் நோக்கும்போதெல்லாம் தெரிந்தோ, தெரியாமலோ இறைவனைத் தொழவே செய்கின்றனர். அப்பலோ 13 எனும் விணகலம் சந்திரனில் இறங்க 1970 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 11ம் திகதியன்று முயற்சித்தது. இந்த விண் கலத்தின் முக்கிய பகுதியான சந்திரனை (Lunar Module) நூற்றுக்கணக் கான விஞ்ஞானிகளால் பல கோடி டொலர் செலவில் உருவாக்கப்பட்டது. இருந்தபோதிலும் இதை உருவாக்கிய விஞ்ஞானிகள் ஒரு சமயத்தில், இது வெடிக்கப்போகின்றது என எதிர்பார்க்கவில்லை. ஆனால் விண்வெளி வீரர்களின் வாழ்க்கைக்கு அபாயம் என்ற நிலை ஏற்பட்டபோது “வீரர்கள் அபாயமின்றி பூமிக்குத் திரும்ப எல்லோரும் இறைவனிடம் வேண்டிக் கொள் ளுங்கள்” என நாஸா (அமெரிக்க விண்வெளி நிறுவனம்) விஞ்ஞானிகள் வேண்டுகோள் விடுத்தனர். என்னே நமது நிலை! அபாயம் நேரும்போதெல் லாம் பெரும்பாலான மக்கள் இறைவனை நினைக்கின்றார்கள். இதர சமயங்களில் அதே இறைவனை எளிதில் மறக்கவும் செய்கிறார்கள்.

**3. சாத்திரங்களே இறுதியான அத்தாட்சி**

**3.1 வேதம்**

வேதங்கள், இறைவனால் ஜட உலகத்தின் முதல் நபரான படைப்பின் கர்த்தா பிரம்மதேவருக்கு நேரடியாகப் போதிக்கப்பட்டது. செவி வழியாக அதன் பொருள் உள்வாங்கப்படுவதால், வேத அறிவு “சுருதி” எனக் கொள் ளப்படுகின்றது. எனவே வேத அறிவானது அங்கீகரிக்கப்பட்ட குருவான வர்களிடம் இருந்து பணிவுடன் கேட்டு அறியப்படவேண்டும். இதுவே “ஸ்வரண மார்க்கம்” என அழைக்கப்படும். இப்படியாக முன்னைய யுகங்களில் குரு சீட பரம்பரை வழியாக வேத அறிவு பேணப்பட்டு வந்தது. வேதங்களை எழுத்து வடிவத்தில் புத்தகவடிவில்

வைக்கப்படவேண்டிய தேவை இல்லாமல் இருந்தது. ஆனால் தற்போதய கலியுகம் சண்டைகளும் சச்சரவுகளும் நிறைந்த தாக இருக்கும் என்பதையும், கலியுக மக்கள் குறைந்த ஆயுளும், குறைந்த ஞாபகசக்தியும் உடையவர்களாக இருப்பர் என்பதையும் கருத்திற் கொண்டு ஐயாயிரம் வருடங்களுக்கு முன்பே கலியுக ஆரம்பத்தில் ஸ்ரீலா வியாசதேவர் அவர்கள் ஆன்மீக அறிவைப் புரிந்துகொள்ளும் ஆவலுடைய மக்களுக்காக வேதநூல்களை எழுதி வைத்தார். "வேதம்" என்ற சொல் "அறிவு" என்று பொருள்படுகின்றது. "வேதாந்தம்" என்ற சொல் "அறிவின் எல்லை" என்று பொருள்படுகின்றது. பகவானின் கீதமான "பகவத் கீதை" எல்லா வேத அறிவின் சாரமென அறியப்படும்.

### 3.2 இறுதி உண்மை

வேத நூல்களே இறுதி உண்மை என நாம் ஏன் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கேள்வி எழலாம். "தன்னுடைய தந்தை யார்?" என்ற கேள்விக்குத் தாயார் அளிக்கும் பதிலையே இறுதியாக ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலையில் குழந்தை இருக்கின்றது என்பதில் ஐயமில்லை. இந்த விடயத்தில் தாய் தரும் தகவல்களை மறுத்துத் தாயுடன் குழந்தை விவாதிக்க முடியாது. இதே மாதிரியாக சிருஷ்டி அனைத்திற்கும் தந்தையாக இருக்கும் இறைவனைப்பற்றி நாம் தெரிந்துகொள்ள வேண்டும் ஆயின் அந்த விடயங்களை நமக்கு தாயின் நிலையில் நிற்கும் வேதங்களை அணுகியே நாம் பெறவேண்டும். இறைவனிடமிருந்து நேரடியாகப் பெறப்பட்டதால், வேதங்களின் கூற்றை, தவறுகள் இல்லாத இறுதி உண்மை என்றே நாம் ஏற்க வேண்டும். உதாரணமாக, பசுவினுடைய சாணம் ஒரு பவித்திரமான பொருள் என்று வேத நூல்கள் குறிக்கின்றன. நவீன விஞ்ஞானமும் இது உண்மை என்று உறுதி செய்கின்றது. ஆனால் மலம் ஒரு அசுத்தமான பொருள் என்றே பொதுவாகக் கருதப்படும் ஜட உலகில் சிக்கியிருக்கும் ஜீவாத்மாக்களிடம் நான்கு குறைகள் பொதுவாகக் காணப்படும். அவையா வன பூரணமற்ற, குறையுள்ள புலன்கள் (உதாரணமாக, எல்லா ஒலிச் சுருதிகளையும் நம்மால் கேட்க முடியாது.) ஏமாற்றும் தன்மை, தவறுகள் விடக்கூடிய நிலைமை, மாயாவின் சக்திக்குட்பட்டு இல்லாத ஒன்றை இருப்பதாக உணர்த்தல். ஆனால் வேத நூல்களிலே கூறப்படும் கோட் பாடுகள் மேலே கூறப்படும் குறைகள் இல்லாதவை. ஆகையாலேயே, பெரும் புனிதர்களும், ஆச்சாரியர்களும் சாத்திரங்களிலே விதிக்கப்பட்ட விதிமுறை களை மாற்றாது ஏற்றுக்கொள்கின்றனர். அவ்வாறு ஏற்பதன் மூலம் பரமேஸ் வரனும் ஒப்பற்ற விஞ்ஞானியுமான இறைவனை நாம் தெரிந்துகொண்டு பக்தியுடன் நமது வாழ்க்கைக் கடமைகளை நிறைவேற்றி ஆத்ம ஈடேற்றம் அடையலாம்.

**உசாத்துணை:**

1. "பகவத் கீதை உள்ளபடியே" ஸ்ரீலா பிரபுபாதா.
2. "Scientific basis of Krishna Consciousness" H.B. Damodara Swami.



பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

# கணிதபாடத்தில் மாணவர்களின் பின்னடைவு



கல்விப்பொதுத்தராதர சாதரண பரீட்சையில் மொழியும் கணிதமும் முக்கியபாடங்களாக விளங்கு கின்றன. மொழியில் சித்தியடையும் மாணவர்களின் எண்ணிக்கை கனிசமான அளவில் உள்ளது. கணிதபாடத்தில் சித்தியின் சத வீதம் நாடாளவிய ரீதியில் 50% திலும் குறைவாக காணப்படுகின்றது. சில மாவட்டங்களில் 40% இலும் குறைவாகக் காணப்படுகின்றது. கணித பாடத்தில் சித்தியடையாதமாணவர்கள் க.பொ.த உயர்தர வகுப்பில் கல்வி கற்பதற்கு தகுதியற்றவர்களாக உள்ளார்கள் அதே சமயம் அவர்களது கல்வித்தகமை தரம் 9 ஆக எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

கணித பாடத்தில் பின்னடைவு எப்போது ஏற்பட்டது என்பதை அறிந்து கொள்வது முக்கியமாக கருதப்படுகின்றது. 1972 இற்கு முன்னர் தரம் 8 இற்குப் பின்னர் மாணவர்கள் கலைத்துறை, விஞ்ஞானத்துறை எனப் பிரிக்கப் பட்டு கலைத்துறைக்குச் செல்வோர் எண்கணிதப் பாடத்தையும் விஞ்ஞானத் துறைக்குச் செல்வோர் அட்சரகணிதம், கேத்திரகணிதம் அடங்கிய கணித பாடத் தையும் கற்றனர். இக்காலத்தில் மாணவர்கள் ஏனைய பாடங்களைபோல் கணிதப் பாடத்திலும் சித்தியடைந்தனர். 1972 இல் புதிய கல்வித்திட்டத்தில் தரம் 6 இல் கணித பாடத்தில் புதிய கணிதம் அறிமுகம்செய்து வைக்கப்பட்டது. இதன் பின்னர் எல்லா மாணவர்களும் பொதுவான கணிதத்தைக கற்றனர். தற்போது எண்கணிதம், அட்சரகணிதம், கேத்திர கணிதம், திரிகோணகணிதம், புதிய கணிதம் சேர்க்கப்பட்டு பொதுவான கணிதபாடம் கற்பிக்கப்படுகின்றது. இதனால் மாணவர்களின் கணித பாட சித்தியின் சதவீதம் குறைவாக காணப்படுகின்றது. கணித பாட வினாத்தாள் இலகுவாக்கப்பட்டுள்ளது. எனினும் சித்தியின் சதவீதம் கனிசமான அளவு காணப்படவில்லை.

வினாத்தாளின் கட்டமைப்பை நோக்கும் போது கணிதம் I, கணிதம் II என இரண்டு வினாத்தாள்கள உள்ளன. கணிதம் I இற்கு 2 மணி நேரமும் கணிதம் II இற்கு 2½ மணிநேரமும் ஒதுக்கப்பட்டுள்ளது. இது 2008 இலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளது.

| | | | | |
|---|---|---|---|---|
| கணிதம் I | (பகுதி A) - | பாடத்திட்டம் முழுவதும் | | |
| | (பகுதி B) - | எண்கள் | (40%) | 2/5 |
| | | அளவீடு | (20%) | 1/5 |
| | | புள்ளி விபரவியல் | (20%) | 1/5 |
| | | தொடையும், நிகழ்தகவும் | (20%) | 1/5 |

கணிதம் I இல் எல்லா வினாக்களும் விடையளிக்க வேண்டும். பகுதி

A யில் 30 வினாக்களும் பகுதி B யில் 5 வினாக்களும் உள்ளன.

| | | | |
|---|---|---|---|
| கணிதம் II | எண்கள் | 15% | 2/12 |
| | அளவீடு | 15% | 2/12 |
| | அட்சர கணிதம் | 25% | 3/12 |
| | கேத்திர கணிதம் | 25% | 3/12 |
| | புள்ளிவிபரவியல் | 10% | 1/12 |
| | தொடை, நிகழ்தகவு | 10% | 1/12 |

கணிதம் II இல் பகுதிAயில் 6 வினாக்கள் உள்ளன. 5 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். பகுதிBயில் 3 கேத்திரகணித வினாக்கள் உட்பட 6 வினாக்கள் உண்டு 5 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

மாணவர்கள் தங்களுக்கு ஏற்ற முறையில் பாடப் பரப்புக்களைத்தெரிவு செய்து கற்றலில் ஈடுபடும்போது கணித பாடத்தில் சித்தி பெறுவது மிகவும் இலகுவானது. இதன் காரணமாக வினாத்தாள் கட்டமைப்பு மேலே கொடுக்கப்பட்டுள்ளது.

அதிபர், ஆசிரியர், பெற்றோர்கள், கணிதபாட பெறுபேற்றை மேம்படச் செய்வதற்கு கீழே கொடுக்கப்பட்ட காரணிகளை அறிவது பொருத்தமானதாக அமையும்.

* தரம் 4, 5 இல் மாணவர்களின் கணித எண்ணக்கருக்கள் சிறந்த முறையில் அமையவேண்டும். ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் கணிதத்தில் சிறப்பாகச் தேர்ச்சி பெற்ற கணித ஆசிரியரின் உதவியைப் பெற்றுக்கொள் வதற்கு அதிபர் ஆவண செய்தல் வேண்டும்.

* மெல்லக் கற்கும் மாணவர்களை இனம்கண்டு உபகரணங் கள் மூலம் அடிப்படைத்திறன்களை வளர்க்கவேண்டும்.

* கணிதபாடத்தில் அக்கறை இல்லாத மாணவர்களுக்கு எதிர்கால முன் னேற்றத்துக்கு ஆலோசனைகள் வழங்கி அன்பான முறையில் ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும். கணிதப்புதிர் போட்டிகளை நடாத்தி ஆர்வத்தை ஏற்படுத்தலாம்.

* தரம் 5, G.C.E (O/L), G.C.E (A/L)பரீட்சை வினாத்தாள்கள் மதிப்பிடு களாகும் பாடசாலை மட்டக்கணிப்பீடு என்பது மதிப்பீட்டு வினாக்களை விளங்கிக் கொள்வதற்கும் விளக்கமளிப்பதற்கும் உதவியாக அமைகின்றது.
எனவே கணிப்பீடு மதிப்பீட்டில் சிறந்த தரத்தை அடைவதற்கு உதவு கின்றது.

கணிப்பீடு சிறந்த முறையில் அமையும் போது மதிப்பீட்டின் தரம் மேம்பாடு அடையும்.

* தற்போது நடைமுறைப்படுத்தப்படும் 5E முறை மாணவர்கள் பாடப் பரப்புக்களை விளங்கிக கொள்வதற்கும், தாங்களாக விளக்கங்களைப் பெற்று வினாக்களுக்கு விடையளிப்பதற்கும் ஏற்றதாக உள்ளது.

* தரம் 10, தரம் 11, ஆகிய வகுப்புக்களில் பாடசாலைக்கு ஏற்றமுறையில் பாடப்பரப்புக்களை தெரிந்தெடுத்து மாணவர்களுக்கு விரும்பிய மாதிரி கற்பிப்பதற்கு கணித ஆசிரியருக்கு அதிபர் இடமளிக்கவேண்டும். இதற்கு துறைசார்ந்த அதிகாரிகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

* தரம் 11 மாணவர்கள் 1 தொடக்கம் 16 வரையான பெருக்கல் வாய்பாட்டை சொல்வதற்கு கணித ஆசிரியர் கவனமெடுக்கவேண்டும்.

5 E" Method

1. Engagement Step (ஈடுபடுத்தல்)
2. Exploration Step(கண்டறிதல்)
3. Explanation Step(விளக்கமளித்தல்)
4. Elaboration Step(விரிவாக்கல்)
5. Evaluation and Assessment (கணிப்பீடும் மதிப்பீட்டின் கால நியதிகளும்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அறிவு | → | K | → | 1 | |
| மனப்பாங்கு | → | A | → | 1 | நியதிகளின் மொத்த எண்ணிக்கை 5 |
| திறன் | → | S | → | 1 | |
| பழக்கங்கள் | → | P | → | 2 | |

கணித ஆசிரியர்கள் வினாத்தாளை தயாரிக்கும் போது

1. அறிவு, திறன்
2. தொடர்பாடல்
3. தொடர்புகாணல்
4. காரணம் காட்டல்
5. பிரசினம் தீர்த்தல்

என்பவற்றை கவனத்தில் கொள்ளவேண்டும்.

மேலே கொடுக்கப்பட்டுள்ள காரணிகளுக்கு பரிகாரம் காணும் போது கணிதபாட அடைவு மேம்பாடடையும்.

எண் என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண் என்ப வாழும் உயிர்க்கு.

**திரு. சி. இராமகிருஷ்ணா**
**(ஓய்வு நிலை கணித ஆசிரியர்)**

## என் நினைவில் தாமப்பா பாடசாலை



"இன்னறுங்கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த் தண்சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளக்கி ஒளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்." என அழகுற அமைவுற பாடிவைத்தார் புரட்சிக்கவி பாரதியார்.

எனது ஆரம்பக்கல்வியின் தொடக்கம் தான் தாமப்பா பாடசாலை. அந்த 5 வயதுப் பருவத்தினை நினைக்கும் போது எல்லையில்லா ஆனந்தம் மனதில் குடிகொள்கிறது. அதுவும் என் ஆரம்பக்கல்வி எனது அப்பப்பாவினால் தாபிக்கப்பட்ட பாடசாலையில் என்னும் போது மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தேன்.

எனது அரிவரிவகுப்பு ஆசிரியர் சின்னமக்கா ரீச்சர். அவர் எங்களுக்கு அம்மா போல இருந்தார். எமக்கு அறிவூட்டும் நேரத்தில் நல்ல ஆசிரியராகவும் அமெரிக்கன் பால்மா தரும்போது பசி நீக்கும் அம்மாவாகவும் நாம் பாடசாலையின் வேலியில் பொந்து வைத்து பால்மா கொடுத்து நாவற்பழக்கார அம்மாவிடம் நாவற்பழம் வெண்டும் போது சி.ஐ.டி. ஆகவும் இருந்தார். சின்னமாக்கா ரீச்சர் கணிதம் கற்பிக்கும் அழகே தனியழகு. எமது பிஞ்சுவிரல்களைப் பிடித்து, வெள்ளை மணலில் இலக்கங்களையும் தமிழ் எழுத்துக்களையும் எழுதுவித்து மிகவும் பொறுமையாக பாடம் சொல்லித் தந்தார். தன் பிள்ளைகளை விட எம்மையே தன்பிள்ளைகளாக நினைப்பார். அவவின் அடிப்படைக் கணித அறிவு தான் இன்று நான் ஒரு சிறந்த கணித ஆசிரியை ஆகக் திகழ வழிவகுத்தது எனலாம்.

அடுத்து இன்றும் என் நினைவிலும் அடிக்கடி சந்திக்கும் என் ஆரம்பக் கல்வி ஆங்கில ஆசிரியை பரமேஸ்வரி ரீச்சர். இவர் நல்ல வெள்ளையாக இருந்ததாலும், இன்னொரு பரமேஸ்வரி ரீச்சர் பன்னவேலைப் பாட ஆசிரியராக இருந்ததாலும் என் முதல் ஆங்கில ஆசிரியை நாம் வெள்ளைப் பரமேஸ்வரி ரீச்சர் என்று செல்லமாக அழைப்போம். இவர் நல்ல நல்ல சிறுவர் ஆங்கிலப் பாடல்களை அழகாகப் பாடி, எங்களையும் பாடவைப்பார். பரமேஸ்வரி ரீச்சர் மணலில் எங்கள் கையைப் பிடித்து A,B,C.... எழுதுவிக்கும் போது அவர் எங்களுடன் படும்பாடு பெரிய திண்டாட்டம். நாங்கள் விடும் படுசுட்டித்தனங்களைக் கண்டு மிகவும் இரசித்துப் புன்னகைப்பார் எங்கள் பரமேஸ்வரி ரீச்சர்.

இறுதியாக என் நினைவில் நிழலாடுபவர். இன்று இம்மண்ணில் இல்லை. விண்ணுலகம் நாடிச் சென்றுவிட்ட பன்னவேலை ஆசிரியையான பரமேஸ்வரி ரீச்சர். பரமேஸ்வரி ரீச்சர் மாநிறம் பொருந்தியவர். ஆனாலும் புன்னகை K.R. விஜயா போன்றது. மிகவும் நல்லவர். சின்னப்பனங்கட்டிக் குட்டான், சிறுபாய், சிறிய விளையாட்டுப் பொருட்கள் எல்லாம் பன்ன இலையில் அந்த 5 வயதில்

எங்களுக்கு பழக்கித் தந்த பெருமை பரமேஸ்வரி ரீச்சரையே சாரும்.

மற்றும் பூமணி அக்கா ரீச்சரும் ஞாபகத்தில் இருக்கிறார். அவரிடம் நான் கல்வி பயிலாவிட்டாலும் அவவில் அழகு, அன்பு காரணமாக இடைவேளை நேரங்களில் அவவிடம் ஒன்றிணைவோம்.

நாங்கள் படிக்கும் காலத்தில் G.C.E. O/L வரை இருக்கு பாடசாலை சிலரின் சூழ்ச்சியால் ஆரம்ப பாடசாலையாக தரம் குறைக்கப்பட்டது. ஆனாலும் "தர்மம் தலைதூக்கும்" என்ற முதுமொழிக்கிணங்க இன்று வடமராட்சில் 5ஆம் ஆண்டு புலமை பரீட்சையில் பலமாணவர்களை சித்தியடைய வைத்து, ஒரு தலைசிறந்த ஆரம்ப பாடசாலையாக நிகழ்வதையிட்டு எனது மனம் பேர் உவகை அடைகின்றது. இப்பொழுது இருக்கும் அதிபர் திரு. குருகுலலிங்கம் அவர்களின் சிறந்த முகாமைத்துவத்தாலும், சிறந்த ஆசிரியர் குழாமின் குடுமையான உழைப்பாலும் ஏழை, பணக்காரர் வேற்றுமையின்றி சகல மாணவர்களையும் அறிவு, திறன், மனப்பாங்கு ஆகியவற்றில் சிறப்புற தேர்ச்சியடைய வைத்தமைக்கு இப்பாடசாலையின் "100வது" பிறந்த தினத்தில்நன்றிகள் பல கூறுவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

எனது ஆரம்பக்கல்வியைத் தந்த தாமோதர வித்தியாசாலையை என்றும், எப்பொழுதும் நினைவில் நிறுத்தி, பாடசாலையின் வளர்ச்சி இன்னும் மேலோங்க உதவிக்கரம் நீட்டுவேன் எனக் கூறி, இக்கட்டுரையை நிறைவு செய்கிறேன்.

**திருமதி. சாரதா ஜெயக்குமார்**
B.A., Dip-in-Edu & Maths trained)
கணித ஆசிரியை
கொ/இந்துக்கல்லூரி,



2011 தரம் 5 - புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்கள் மற்றும் வெற்றிக்கு வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்கள்

இடமிருந்து வலமாக - செல்வி. சி. சாகித்தியா (163), செல்வி. ந. நிரோஜினி (165), செல்வி. அ. லோகிதா (162), செல்வி. சி. சாகித்தாரா (171), செல்வி. க. தரணியா (164), செல்வி. ர. மனுஷா (161), செல்வன். சி. மதுசன் (158), செல்வன். த. அர்ஜுன் (154), செல்வன். சி. கதுர்ஜன் (171), செல்வன். ச. திருஜன் (175), செல்வன்.ஜெ ஜெதுர்ஷன் (161), செல்வன் ந. விந்துசன் (152).

ஆசிரியர்கள்: திரு. தி. கணேஸ்வரன், அதிபர் சி. குருகுலலிங்கம், சி. பொன் சிவநேசன்.

# நான் கற்றபாடசாலை யா/ கரணவாய் தாமோதர வித்தியாலயம்



இந்து மகா சமுத்திரத்தின் முத்தெனப் போற்றப் படுவது இலங்கைத்தீவு இரத்தினதுவீபம், மாணிக் கத் துவீபம், தாமரபரணி எனப்போற்றிப்புகழப்படும் இத்தீவின் சிரசாகவிளங்கும் வடபகுதியான யாழ்ப் பாணத்தில் சைவமும் தமிழும் இருகண்களெனக் கொண்டுவாழும் சிறந்த கிராமம் கரணவாய்.

இக்கிராமத்தில் அதிகமாக வாழ்ந்தவர்கள் ஏழைவிவசாயிகள். அந்தக் காலத்தில் அவர்களுடையபிள்ளை கல்விகற்பதற்கு வெகுதூரம் நடந்து செல்ல வேண்டியிருந்தது. அதனால் பலபிள்ளைகள் பாடசாலை சென்று கல்விகற்காமலே விட்டுவிட்டன. கரணவாயில் புகழ்பூத்த குடும்பத்தில் பிறந்த வழக்கறிஞர் அமரர் தாமோதரம்பிள்ளை அவர்கள் இதைக்கண்ணுற்று தனது சொந்தக்காணியில் சொந்தப்பணத்தில் ஓர்பாடசாலையைத்தாபித்தார். பெருந்தகை வழக்கறிஞர். அமரர் தாமோதரம்பிள்ளையை தாமுப்பிரக்கிராசி யார் பணக்கார அப்பா என நன்றியுடன் கரணவாய் மக்கள் நினைவு கூருவர்.

இப்பாடசாலையில் நான் கற்றகாலம் 1947 தொடக்கம் 1953வரையாகும் இக்காலத்தில் இப்பாடசாலையின் அதிபராக விளங்கியவர் அமரர் சி. கந்த வனம் ஆசிரியர் ஆகும். அவரோடு இணைந்து கற்பித்த ஆசிரியர்கள் அமரர் களான திரு. வல்லிபுரம், பண்டிதர் தி. வீரகத்திப்பிள்ளை. கந்தசாமி, பண்டிதர் க. மாணிக்கம், திரு. பொன்னம்பலம், வித்துவான், சே. கந்தையா, திருமதி. சின்னாச்சி ஆகியவர்களாகும். இவர்களுள் திரு. பொன்னம்பலம் அவர்கள் ஆங்கில ஆசிரியராகவும் வித்துவான் கந்தையா கணித ஆசிரியராகவும் கடமையாற்றினார்கள்.

நான் கற்றகாலத்தில் இப்பாடசாலையில் 1ம் ஆண்டு தொடக்கம் 10ம் ஆண்டுவரை கல்விகற்பிக்கப்பட்டது அக்காலத்தில் பலபேர்கள் தமிழ் மொழிமூலம் சிரேஷ்ட தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்திபெற்று மேலதிக அரச சேவையில் சேர்ந்தனர். அதைவிட மாலைநேரவகுப்பாக ஆசிரிய தரா தரப்பத்திரப்பரீட்சை ஆசிரிய கலாசாலைப் பிரவேசப்பரீட்சை போன்ற பரீட்சை கட்கு தோற்றும் மாணவர்கட்காக நடாத்தப்படும் இன்று எத்தனையோ பழைய மாணவர்கள் ஆசிரியர்களாக, அதிபர்களாக இருக்கின்றனர். ஆரம்பக் கல்வியை இப்பாடசாலையில் கற்ற எத்தனையோ மாணவர்கள் கணக் காளர்களாக, மருத்துவர்களாக இப்படி உயர்பதவிகளில் இருக்கின்றார்கள்.

ஆரம்பக்கல்வியை இப்பாடசாலையில்படித்து உயர்தரக்கல்வியை உடுப்பிட்டி அ.மி.கல்லூரி பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி நெல்லியடி ம.ம.வித்தியாலயம் ஆகிய கல்லூரிகளில் தொடர்ந்து பல்கலைக்கழகம் வரை சென்றவர்கள் பலர் அரசவேலையில் பலஉயர் பதவிகளை வகித்தனர். இன்றும் வகித்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பல மாணவர்களை அடிப்படைக்கல்வியை ஊட்டி உயர்வடையச் செய்த பெருமை தாமோதர வித்தியாசாலைக்கும் அதில் கற்பித்த ஆசிரியர்களையும்சாரும்.

ஆரம்பகாலந்தொட்டு பல மாணவர்கள் 5ம் தர புலமை பரீட்சையிலும் சித்தியெய்தி உள்ளார்கள்.

இப்பாடசாலை ஸ்தாபிக்கப்பட்டபின் பின்பு ஸ்தாபிக்கப்பட்ட எத்தனையோ பாடசாலைகள் மிகவும் முன்னேற்றகரமாக வளர்ச்சியடைந்துள்ள நிலையில் இப்பாடசாலை தரம் 10லிருந்து 5ம் தரம் வரை தரம் இறக்கப்பட்டதற்கு அரசியல் செல்வாக்கு காரணமாக இருக்கலாம்.

இந்நிலையேற்பட்டதற்கு இக்கிராமவாசிகளான நாம் அனைவரும் பொறுப்பேற்க வேண்டும்

இந்த ஆண்டு பெற்ற 5ம் தர புலமைபரீட்சையில் அதிகமான மாணவர்கள் (12பேர்) சித்தியெய்தியமை மிகவும் சந்தோஷமான விடயம் இப்பிள்ளைகளை தயார் செய்த ஆசிரியர்களும் அதிபரும் நன்றிக்குரியவர்கள். வருங்காலத் திலாவது இப்பாடசாலை முன்பு இருந்ததுபோல் தரம் 10வரை உயர்வதற்கு நாம் அனைவரும் முயற்சிப்போமாக.

**மு. நாகலிங்கம் J.P.**
அகில இலங்கை ஓய்வுபெற்ற நிர்வாக
உத்தியோகத்தர்,
(பழைய மாணவன்)

நூற்றாண்டில் கணனிக்கூடத் திறப்பு விழாவின் போது....



## தாமோதர வித்தியாலயம் எனது நினைவுச் சுவடுகளில்...



1953ஆம் ஆண்டிலிருந்து 1956ஆம் ஆண்டுவரை வித்தியாலயத்தில் நான் கல்வி கற்ற காலத்தில் எனது உள்ளத்திலும் குருதியிலும் ஆழமான உறுதிதளராத சுவடுகளை இட்டுச் சென்ற அனுபவங்களை தாமோதர வித்தியாலயத்தின் இளைய சமுதாயத்துடன் பகிர்ந்து கொள்வதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன். இன்றும் கூட வித்தி யாலயத்தின் முன்னால், பாதையில் செல்லும் போது எனது கல்விக்கும் வாழ்விற்கும் ஆழமான அத்திவாரமிட்ட வகுப்பறைகளையும் கிந்தியடித்தல், யாடி, வார்ஓட்டம் போன்ற பழைய விளையாட்டுக்களை வித்தியாலய மண்ணிலே விளையாடிய பசுமையான எண்ணங்களும் மறக்க முடியாதவை. தாமோதர வித்தியாலயத்தில் அந்தக் காலத்தில் க.பொ.த. சாதாரண தரம் வரை வகுப்புகள் இருந்தன. வடமராட்சியில் சாதாரண மக்களின் ஒரு சிறந்த கல்விக் கூடமாக அப்போதும் இருந்தது. இப்பிரதேசத்தின் எல்லாப் பாகங்களிலிருந்தும் புற்றீசல் ஒளியை நாடி வருவதுபோல தாமோதர வித்தி யாலயம் என்னும் ஞான தீபத்தைத் தேடி மாணவர்கள் வந்தனர். ஆசிரியர் களின் சிறந்த கற்பித்தலுடன், கட்டுப்பாடும், பழமைவாய்ந்த பாரம்பரியமும் திறமையும் பேணிப்பாதுகாக்கப்பட்டு, பாடசாலையிலிருந்து விலகும்போது வாழ்க்கையின் போராட்டங்களை எதிர்கொள்ளும் ஆற்றலை எமக்களித்த பெருமை தாமோதர வித்தியாலயத்திற்கும் அதன் ஆசிரியர்களுக்கும் உரி யது. அந்த நேரத்தின் சிறந்த ஆசிரியர்கள் அனைவரையும் இடமஞ்சி நாம் சந்திக்க முடியாவிட்டினும் ஒரு சிலரையாவது சந்திப்போம் "வாருங்கள்".

புன்னகை தவழும் முகம், பலவிடயங்களை ஒரே நேரத்தில் அவதானிக் கும் ஆற்றல், கருணை உள்ளம் கொண்ட பார்வை, தெளிவான பேச்சு, தூய்மையான உடை, அறிவைப் பறைசாற்றும் அமைதியான தோற்றம் கொண்ட எமது தாமோதர வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் கந்தவனம் ஆசிரியரின் காலத்தில்தான் 1953ஆம் ஆண்டில் 2ஆம் வகுப்பில் தாமோதர வித்தியாலயத்தில் எனது கல்வியை தொடர்வதற்காகக் காலடி எடுத்து வைத்தேன். கந்தவனம் ஆசிரியர் ஒரு சிறந்த அதிபராக, மாணவர் பெற்றோர், நலன்விரும்பிகளுடன் திறம்பட பணியாற்றி வித்தியாலயத்தைச் சிறந்த கல்விக் கூடமாக திகழ வைத்தவர்.

பட்டினத்தார், தாயுமானவர், இராமலிங்க சுவாமிகள் மூவரும் சங்கமித்த உருவமாக நெற்றியிலே நீறும் நடுவிலே பொட்டும், வெள்ளை உடையுடன் (வேட்டி, நாஷனல், கரைபோட்ட சால்வை - அப்போது எல்லா ஆசிரியர் களுக்கும் அதுதான் உடை) காலைத் தூக்கி நடந்து வருகிறாரே அவர்தான் மாணிக்க வாத்தியார். எங்களது சமய ஆசிரியர். ஆழ்ந்த சமயப்பற்றுள்ளவர், ஆலயத்திலே "பஞ்சபுராணம் பாடுக" என்று உங்களிடம் ஐயர் சொன்னால் உடனே பாடவேண்டும் என்று கூறுவார். நான் மாணிக்கம் ஆசிரியருக்குப் பாடிக்காட்டும் போது

இத்தேவாரங்களின் தொடர்ச்சியில் ஒரு பாட்டை விட்டுவிட்டேன். எனக்குப் பிரம்பால் வீழ்ந்த அடி இன்னும் எனது முதுகிலே இனிமையாக, பசுமையாக இருக்கிறது. மாணவர்கள் கல்விகற்கும்போது சிறந்த சமயப்பற்றுள்ளவர்களாக வளரவேண்டும் என்பதற்காக அவருடை அர்ப்பணிப்பும் அவரைத் தொடர்ந்து வித்தியாலயத்தின் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பும் மகத்தானது.

க.பொ.த சாதாரணதரத்திற்குச் சரித்திர பாடத்தை முக்கியமாக கற்பிப்பார் பொன்னம்பல வாத்தியர். இரண்டாம் உலக யுத்தம் எப்படி ஏற்பட்டு முடிந்தது என்று கற்பிக்கும்போது சில சமயங்களில் பாடசாலை முழுவதுமே யுத்தகளமாக இருக்கும். ஏனெனில் மாணவர்கள் அமைதி அவர் அவ்வளவு சத்தம் இவரைப் பற்றிய ஒருசிறு குறிப்பு - தாமோதரவித்தியாலயத்தின் சிறப்பிற்கும் பெருமைக்கும் சிறந்த உதாரணம் என்று உணர்கின்றேன். இந்தப் பொன்னம்பலம் தனது ஆரம்ப கல்வியை வேறொரு பாடசாலையில் கற்று வந்த காலத்தில் இவர் படிப்பில் வனமின்றிக் குழப்புவதாக இவரது தாய் அப்போது (1920ஆம் ஆண்டளவில்) தாமோதர வித்தியாலயத்தில் சிறப்பாக கல்வி கற்பித்து வந்த கந்தையா ஆசிரியரிடம் முறையிட்டார். அவர் உடனடியாக பொன்னம்பலத்தை தாமோதர வித்தியா லயத்தில் சேர்த்து விடும்படி சொல்லி அவருக்கு வேண்டிய கல்விச் செல் வத்தை வழங்கி பாடசாலையில் ஆசிரியராகவும் சேவைசெய்ய வைத்தார். கந்தையா ஆசிரியர் தாமோதர வித்தியாலயத்தின் ஆரம்பகாலத்தில் அவருடன் அப்போது இருந்த அதிபர் செல்லையா ஆசிரியரும் கந்தசாமி ஆசரியரும் இதை ஒரு சிறந்த கல்விக் கூடமாக வளர்த்து, என்னை மட்டுமல்ல நூற் றுக்கணக்கான மாணவர்களை நல்வழிப்படுத்திய "சிற்பி" என்று பொன்னம் பலம் ஆசிரியர் அடிக்கடி நினைவு கூறுவார். இந்த பொன்னம்பலம் ஆசிரியர் எனது தகப்பனார். நான் படிக்கும்போது அவர் அங்கேதான் ஆசிரியராகக் கடமை செய்து வந்தார் என்பதற்காக நான் பாடசாலையிலே செல்லப்பிள்ளை யாக இல்லை, அதற்கு நேர்மாறாக ஆசிரியர்களது பணிப்புரைகள் யாவற்றை யும் செம்மையாக நிறைவு செய்ய வேண்டி இருந்தது. புராண அதிகாசங் களிலேயுள்ள குரு - சிஷ்ய முறையின் ஒரு சிறிய அளவு நான் கல்வி கற்ற காலத்திலே தாமோதர வித்தியாலயத்தில் இருந்திருக்கின்றது என்பதை இப்போதும் உணர்கின்றேன். பழைய புராணக் கதை ஒன்றிலே ஒரு குருவான வர். தனது சிஷ்யனின் மடியில் படுத்துச் சயனம் செய்தார் என்றும், அப் போது சிஷ்யனின் காலிலே ஒரு விஷப் பூச்சி கடிக்க வந்துவிட்டது என் றும், விஷப்பூச்சி கடிப்பதையும் பொருட்படுத்தாமல் குருவானவர் சயனத்தி லிருந்து எழும்பும் வரை சிஷ்யன் அசையாமல் பேசாமல் இருந்துவிட்டான் என்றும் கூறப்படுகிறது. இது புராண காலத்தில் குரு - சிஷ்ய முறையின் உச்சக்கட்டம். இந்த நவீன காலத்தில் அந்தஉச்சக்கட்டத்தில் இல்லாவிட்டாலும் நாங்கள் தாமோதர வித்தியாலயத்தில் கல்விகற்கும்போது குரு - சிஷ்ய முறையின் ஒரு மனோபாவத்தை பெற்றிருந்தோம் என்பதை என்னால் உணரமுடிகிறது. எனது பிற்காலத்திழல் எதிர்கொண்ட பிரச்சினைகளைச் செம்மையாக நிவர்த்தி செய்வதற்கு இந்த அமைதியான மனோபாவம் உதவியது என்று உறுதியாகக் கூறமுடியும்.

சோடாப் போத்தல் அடிப்பாகக் கண்ணாடியுடன் தீட்சணியமான தனது பார்வையினால் எல்லா மாணவர்களையும் ஒரே பார்வையில் அளந்து விடுவார் வீரகத்தி ஆசிரியர். இவர் கணக்குப்பாடத்தை கற்பிப்பதே ஒரு தனிரகம். ஒரு நாள் வகுப்பிலுள்ள அனைவரும் சேர்ந்து ஒரு இலக்கத்தை நினைத்து வைக்கும்படி சொன்னார். அடுத்த நாள் கணக்குப் பாடத்திற்கு வந்து நினைத்த இலக்கத்துடன் 60யும் 40யும் கூட்டி நினைத்த இலக்கத்தை கழித்து இரண்டால் பிரிக்கும்படி சொன்னார். எங்களுக்கு வந்த விடையை சரியாக அவரே சொன்னார். எங்களுக்கு ஒரே அதிசயம். அதை எப்படிச் சொன்னார் என்று விளங்கியபோதுதான் அது எவ்வளவு சாதாரணம் என்று கணக்கிலே அவதானம் எவ்வளவு முக்கியம் என்பதைத் தெளிவாக உணர்த்தினார். சகல மாணவர்களுக்கும் கணக்கிலே ஒரு ஆர்வத்தை உருவாக்கும் வல்லமை படைத்தவர் வீரகத்தி ஆசிரியர்.

ஈஸ்வரி அக்காவின் பன்ன வேலைப்பாடமும் சிவஞானமணி அக்காவின் சித்திரபாடமும் நாள் முழுவதும் நடந்தால் என்ன என்று நினைப்பேன். பாடசாலைச் சிறுவனாக அவர்கள் காட்டிய அக்கறை, பாசம் இப்போதும் பசுமையாக மனதிலே இருக்கிறது. மாணவர்களில் இருக்கும் திறமையை இனங்கண்டு உற்சாகப்படுத்தி பொருத்தமான வேளைகளில் பிழைகளைக் கண்டித்து தமிழ்ப்பாடத்தை படிப்பித்தவர் பண்டிதர் கந்தவனம் ஆசிரியர். 1911ஆம் அண்டு ஆரம்பிக்கப்பட்ட எமது தாமோதர வித்தியாலயம் தனது சேவையிலே 100 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் நூற்றுக்கணக்கான ஆசிரியர்களின் திறமை மிகுந்த சேவைளைப் பல்லாயிரக்கணக்கான மாண வர்களுக்கு வழங்கிய பெருமையைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அந்த ஆயிரக்கணக்கான மாணவர்களில் நானும் ஒருவன் என்ற பெருமையும் மகிழ்ச்சியுமடைகின்றேன். அந்த ஆயிரக்கணக்கான மாணவர்கள் இன்று அரச சேவையிலும் தொழில் நிறுவனங்களிலும் பல்வேறு பதவியிலும், டாக்டர்களாகவும் பிறநாட்டில் வெற்றிகரமான தொழில் புரிபவர்களாகவும், ஆக்கபூர்வமான சுயவேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டவர்களாகவும் வாழ்வதற்கு வழி சமைத்த பெருமையைக் கொண்டது தாமோதர வித்தியா லயம்.

ஆழமான உறுதிதளராத கல்வியறிவையும் மன உறுதியையும் ஊட்டிய தாமோதர வித்தியாலயத்தின் பெருமையை சிறியேன் இச் சிறு பந்தியிலே எழுத்திலே வடிக்க முடியாது. தாமோதர வித்தியாலய மாணவனாக பழைய வற்றை இரையிடக்கும்போது அக்கல்வித் தாயுடன் இளமைக் காலத்திலே சங்கமித்து இருந்ததை நினைவு கூரும் போதும் “என்ன புண்ணியம் செய் தனை நெஞ்சமே” என்று எண்ணத் தோன்றுகிறது. அபிராமிப்பட்டரின் திரு வாக்கைப் பயன்படுத்தி “நாயேனை ஒரு பொருளாக நயந்து வந்து நீயே நினைவின்றி ஆண்டு கொண்டாய் என்ன பேறு பெற்றேன் தாயே” என்று தாமோதரவித்தியாலயத் தாயை வாழ்த்தி அமைகிறேன்.

Dr. P. Ramanathan
BVSc (Cey), MSc (SL)



2011ஆம் ஆண்டு நடைபெற்ற இல்ல மெய்வன்மைப் போட்டியில் வெற்றிப்பெற்ற வீர வீராங்கனைகளுடன் அதிபர், ஆசிரியர்கள்.

## நூற்றாண்டு விழாக் குழு:

திரு. சி. குருகுலலிங்கம் அதிபர்

திரு. தி. கணேஸ்வரன் ஆசிரியர்

திரு. சி. பொன் சிவநேசன் ஆசிரியர்

திரு. ம. குகதாசன்

திரு. ம. தர்மகுலசிங்கம்

திருமதி ச. அனுரதி

திரு. சி. சந்திரகாசன்

திரு. சோ. விமலேஸ்வரன்

திரு. வ. நவராசா

திரு. ந. செல்வநாயகம்

திருமதி. சி. மஞ்சுளா

திரு. ம. பிரபாகரன்

திரு. கு. பாஸ்கரன்

திரு. வி. ஜெயமோகன்

திரு. த. தவேந்திரராசா

திரு. க. சிவகுருநாதன்

திரு. தி. ஸ்ரீதரன்

திரு. இரத்தினேஸ்வரன்

திரு. த. சசிதரன்

திரு. ஜெ. கந்ததாஸன்

திரு. சி. இராசரட்ணம்

திரு. கா. இராமஜெயம்



பாடசாலை ஆசிரியர் குழாம்..

**மலர் குழு:**

**திரு. சி. குருகுலலிங்கம் அதிபர்**

**திரு. ந. செல்வநாயகம்**

**திரு. கு. பாஸ்கரன்**

**திரு. கா. இராமஜெயம்**

**திரு. ம. பிரபாகரன்**

**திரு. வி. ஜெயமோகன்**

**திரு. தி. கணேஸ்வரன் ஆசிரியர்**

**திரு. சி. பொன் சிவநேசன் ஆசிரியர்**

**திரு. ச. அனுரதி**

**திருமதி. சி. சச்சிதானந்த மூர்த்தி**

**திருமதி. சு. பாக்கியநாதன் ஆசிரியை**

## ஆசிரிய தொழில் வாண்மை



ஏட்டுக்கல்வியும், தொழிற் கல்வியும் இணையப்பெற்ற நாட்டில்தான் அறிவும், திறனும், உயர்வும், வளமும் பெருகும். அறிவும் திறனும் ஒருங்கே பெற்ற ஆற்றல் உள்ளவர்களை உருவாக்குவது ஆசிரியரின் பொறுப்பாகும். ''மனிதனுள் புதைந்திருக்கும் பூரணத்துவத்தை வெளிப் படுத்துதல் கல்வி'' என சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளார். கல்வித்துறை உலகில் நடைபெறும் மாற்றங்களுக்கேற்ப மாற்றியமைக்கப்பட்டு வருகிறது. இவற்றிக்கு முகம்கொடுக்கும் வகையில் ஆசிரியர்கள் செயற்படு வது அவசியமானதொன்றாகும்.

தொழில் வாண்மை என்பது ஏனைய தொழில்களில் செல்வாக்கு செலுத்திய அளவுக்கு கல்வியில் செல்வாக்கு செலுத்தவில்லை என்றே கருதப்படுகிறது. ஆசிரிய வாண்மை என்பது மிக முக்கியமானது ஆசிரியர்கள் தம்மிடம் பெரிய ஒரு பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது என சதா சிந்தித்த வண்ணம் செயற்படவேண்டும். "கேத்திர கணிதம் தெரியாதவர் பல்கலைக் கழகத்தில் நுழையக் கூடாது" என்று பிளேட்டோ குறிப்பிட்டது போன்று தொழில் வாண்மை விளங்கிக் கொள்ளாதவர் ஆசிரியர் பணியில் ஈடுபடக் கூடாது எனலாம்.

ஆசிரியத் தொழிலின் வாண்மை தொடர்பாக பல தத்துவஞானிகள் எடுத்தியம்பியுள்ளனர். "உலகத்தோடு ஒட்ட ஒழுகல்" தான் இன்றைய எமது தேவை உலகம் துரிதவேகத்தில் பல்வேறு மாற்றங்களைக் கண்டு வருகிறது. புதிய சிந்தனைகளும் உபகரணங்களும் உத்திகளும் தினமும் மாறிய வண் ணம் உள்ளன. இந்நிலையில் காலத்தின் தேவைக்கு ஏற்ப நவீன கருத்துக் களுடனும், உடனடித் தகவல்களைத் தரக்கூடிய திறனுடனும் நம்பகமும் தகுதியும் கொண்டவர்களாக ஆசிரியர்கள் விளங்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையில் இன்று நடைமுறைப்படுத்தப்படும் புதிய கல்வி மறுசீர் அமைப்பிலும் கூட ஆசிரியத் தொழில்சார் விருத்திக்கான பல்வேறு விதப்புரை கள் முன்மொழியப்பட்டுள்ளன. ஆசிரியர்களின் தொழில்வாண்மை விருத்திக்கு ஆசிரியர்களுக்கு தொழிலில் ஈடுபட்டிருக்கும்பொது வழங்கப்படும் தொடருறு பயிற்சிகளும், சேவைக்கால பயிற்சிகளும் வாண்மை விருத்தியை வளர்க்கும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆசிரியர் தமது தொழிலைச் செய்கையை அத்தொழிலுக்குரிய சிறப்புத் தேர்ச்சியைப் பெற்றிருக்க வேண்டும். அதாவது கற்பித்தல் செயன்முறையின் போது தமது மாணவர்கள் அடைய வேண்டும் என எதிர்பார்க்கப்படும் திறன் களைப் பெறுவதற்கு வேண்டிய தகுதியையும், அதற்குரிய தேர்ச்சியும் கொண்டி ருக்க வேண்டும். அப்போதுதான் ஆசிரிய தொழில் வாண்மையில் வெற்றிப் பாதையில் வீறுநடைபோடும்.


காலத்தின் தேவைக்கு ஏற்ப மாறிவரும் சமூகத்தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு கல்வி மறுசீர் அமைப்புக்கள் நடைமுறைப்படுத்தப்படு கிறது. இன்னும் சகல ஆசிரியர்களுக்கும் கணனிக் கற்கைக்கான பயிற்சி நெறி வழங்கப்பட்டு வருகின்றன. இவை மாணவரின் கல்வி வளர்ச்சியின் பொருட்டே வழங்கப்பட்டு வருகிறது. ஆசிரியர்கள் சில நடைமுறைப் பிரச்சினை களையும் எதிர்நோக்க வேண்டியுள்ளதையும் நாம் இங்கு குறிப்பிடவேண்டும். அதாவது மாணவர்களின் வரவு ஒழுங்கீனம், நிர்வாக ஒத்துழைப்பின்மை, அதிகளவு மாணவர்களைக் கொண்ட வகுப்பறை, பெற்றோர் ஆதரவின்மை, பொருத்தமற்ற வகுப்பறைச் சூழல் போன்ற நடைமுறைப் பிரச்சினைகளையும் ஆசிரியர்கள் எதிர்நோக்குமாயின் நாம் அவதானிக்க முடிகிறது.

இருப்பினும் அவற்றிற்கு எல்லாம் முகம் கொடுத்து எதிர்நீச்சல் அடிக்க வேண்டிய தேவையும் ஆசிரியர்களுக்கு உண்டு என்பதை மறுந்துவிடலா காது. மாணவர்கள் பற்றிய சகல விபரங்களையும் ஆசிரியர் தெரிந்திருக்க வேண்டும். வைத்தியர் நோய்க்கு ஏற்ப மருந்து கொடுப்பதுபோல ஆசிரியரும் மாணவனின் தகுதி அறிந்து கற்றலுக்கு வழிகோலும் வகையில் கற்பித்தலை மேற்கொள்ளவேண்டும். அப்போதுதான் தொழில் வாண்மை விருத்திபெற முடியும்.

மேலும் ஆசிரியர்கள் பாடசாலைகளில் வழங்கப்படும் பல்வேறு பொறுப் புக்களையும் ஏற்று செயற்படவேண்டும். இணைபாடவிதான செயற்பாடுகளின் வளர்ச்சியில் ஒவ்வொரு ஆசிரியரினதும் பங்களிப்பு அவசியம் அவர்கள் தமக்கு வழங்கப்படும் பொறுப்புக்களை ஏற்று சரிவரச் செய்யும்போது தொழில்வாண் மைச் சிறப்பை அடைகின்றனர்.


முடிவாக ஆசிரிய வாண்மை வகுப்பறையில் இடம்பெறுகின்ற செயற்பாடு களையே பெரிதும் வலியுறுத்துகிறது. வினைத்திறனுள்ள ஆசிரியன் ஒருவர் வினைத்திறனுள்ள கற்பித்தலை மேற்கொள்வதிலேயெ அவரது தொழில் வாண்மை மோலோங்கி நிற்கிறது. ஆசிரியர் தனது நேரடி நுகர்வோனான மாணவனின் தேவைகளை அறிந்து அதற்கு ஏற்ற வகையில் வகுப்பறையை நெறிப்படுத்துவதன் மூலமே வாண்மை விருத்தி அர்த்தமுள்ளதாகின்றது.

**தில்லை நடராசா கணேஸ்வரன்**
(ஆசிரியர்)
யா/கரணவாய் தாமோதர வித்தியாலயம்.



2011 முதன்மை நிலை - 3 : தரம் 5 கல்வி கற்கும் மாணவர்கள், மற்றும் அதிபர், ஆசிரியர்.

## மானிடப் பிறப்பில் ஆசிரியத் தொழில்



"அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது. அதிலும் கூன், செவிடு, குருடு, நீங்கிப் பிறத்தல் அதிலும் பெரி தாகும்" என்பது எமது கண்முன் கண்ட உண்மையாகும். மானிடராகப் பிறந்து சிறுவயதில் அன்னையின் இனிய தமிழ் கேட்டு வாய்மொழி மூலம் பேசும் திறனைப் பெறு கின்றோம் எம்மை ஒரு பிரகாசமான நல்வழிகாட்ட வந்த வரே ஆசிரியர்கள் ஆவார். எமது வளர்ச்சியின் விழா வெள்ளியுமாவார்.

**ஆசிரியர் என்பவர் யார்?**

ஆசிரியர் என்பவர் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பை, முறையாகவும், வினைத்திறனுடனும், வினைத்திறன் கூடிய வகையிலும் நிறைவேற்றக் கூடியவராகவும் மாணவர் அடையவேண்டிய தேர்ச்சியை வழங்கக் கூடிய தேர்ச்சியுடையவராயும் இருத்தல் அடிப்படைத் தேவையாகக் கொள்ளப்படுகின்றது. ஆசிரியர் என்பவர் உயிரிகளோடும், அவ்வுயிர்களால் வெளிப்படுத்தப்படும் உணர்வுகளோடும் இணைந்தும் இணைத்தும் செயற்படுகின்ற உயிரிகளாவர். ஆசிரியர்கள் பிள்ளைகளுடன் இணைந்து செயற்படுவதால் பிள்ளைகள் தொடர்பான இயல்பூக்கங்கள் அவர்களின் விரும்பு பெறுப்புக்கள், அவர்கள் வாழும் காலத்தின் தேவைகள், பிள்ளைகளின் பாரம்பரிய கலாசாரப் பின்னணிகள் ஆகியவற்றை அறிந்திருக்க வேண்டிய தகுதியையும் திறனையும் பெற்றிருத்தல் அவசியமாகிறது. இவ்வகைத் திறன்களையே ஆசிரியர்களுக்குப் பயிற்சிக் காலத்தின் வழங்க வேண்டியுள்ளது. பயிற்சி பெற்றுச் சென்றாலும் மாணவர்களின் மனங்களை கவரும், புரிந்து கொள்ளும் திறனையும் வளர்த்தல் வேண்டும்.

**ஆரம்பக் கல்வி ஆசிரியர் எப்படிபட்டவராயிருக்க வேண்டும்?**

பெற்றோரின் அரவணைப்பிலிருந்து சிறார்கள் பாடசாலையில் முதல் காலடிவைப்பவர்கள். அவர்களை பெற்றோரிலும் மேன்மையான அன்பையும் அதன் மூலம் கல்வியை புகட்டுவது திறமையாகும். நன்னடத்தையும், பெற்றோரை மதிக்கும் திறனையும் வளர்க் உதவவேண்டும். ஒரு மாணவன் சமூகத்தில் நுளையும்போது அவனின் நடத்தைகளைக் கண்ணுற்று எப்பாடசாலையில் கற்கின்றார்? என்ற கேள்வியே முன்நிற்கும் அம்மாணவனின் நடத்தை மூலம் பாடசாலையின் பெரும் ஆசிரியத்துவத்தின் மகிமையும் பாதுகாக்கப்படுமா? அல்லது குறை கூறப்படுமா? இதன் பதில் ஆசிரியரின் கடமையுணர்விலும் தொழிலின் மகிமையும் உணர்ந்து செயற்படுவதன் மூலமே நற்புகழ் பெற்றுத் தரப்படும். ஊதியத்திற்காகவே ஆசிரியத் தொழில் என்ற குறிக்கோளில் செயற்படும் ஆசிரியர்கள் வழிகாட்டும் மாணவர்களே சிறுவயதில் பழகிய செயல்கள் தனது வாழ்வின் இறுதிவரைச் செல்லும். ஆரம்பக்கல்வி மாணவர்கள் பூபோன்ற மென்மையானவர்கள். பூவை எவ்வாறு மெதுவாக பற்றுக்கின்றோமோ அவ்வாறே கல்வியை விளையாட்டு, செயற்பாடு மூலம் மகிழ்ச்சிகர கற்றலாக மாற்றி வெற்றியின் இலக்கிற்கு கொண்டு செல்லல் வேண்டும். நாம் கற்பித்தல் மூலம் மாணவர்கள் பரீட்சையில் உயர் பெறுபேறும், நற்பிரஜையெனப் போற்றும் போது

எமது மனதில் கிடைக்கின்ற பெறுமை வாழ்வில் எவற்றாலும் கிடைக்கூடிய அரும்பெரும் புகழாகும்.

**ஏனைய தொழிலில் ஏன் ஆசிரியர் தொழில் மேன்மையானது?**

எத்தொழிலை எடுத்துக் கொண்டாலும் அத்தொழிலைச் செய்பவன் ஆரம்பத்தில் ஆசிரியராலும், உயர்கல்வி ஆசிரியராலும் வழிகாட்டி வளர்க்கப்பட்ட நற்பெறு பேறு அடைப்படையில் தொழில் வாய்ப்பைப் பெறுகின்றனர். அவர்களின் வழி காட்டிகள் ஆசிரியர்களே, நீதித்துறையில் சட்டத்தரணிகளின் வாதத்திறமையினால் சுற்றவாளிகளும் குற்றவாளியாக தீர்ப்பு வழங்கப்படுகின்ற சந்தர்ப்பங்கள் பல உள்ளன. ஆசிரியத்தொழிலில் பணத்தைக்கொடுத்து கல்வியை பெற்றுக்கொள்ள முடியாது. ஒரு மரத்தின் பயனைப்பெற வேண்டுமானால் நாற்று நாற்றி நீரூற்றி வளர்த்து பாதுகாத்து வளர்ப்பதன் மூலம் பலனைப் பெறமுடியும். வேறெந்த தொழிலும் நாம் பெற்ற அறிவை வழங்கி கற்றோராக மாற்றும் மாண்புமிகு பெருமை கிடைப்ப தில்லை.

**நாம் செய்யவேண்டிய நியதிகள் எவை?**

நாம் எமது இரு கண்களை எவ்வாறு பாதுகாக்கின்றோமோ அவ்வாறு ஆசிரிய வாண்மையை பாதுகாக்க வேண்டும். ஆசிரியர்களும் முன்மாதிரியாக நடத்தல் வேண்டும். அறிவாற்றல், முதிர்ச்சி கொண்ட அறிஞர்களின் கருத்துக் களையும் கேட்கும். அதனை பின்பற்றவும் பழகிக்கொள்ள வேண்டும். கல்விசார், இணைச் செயற்பாடுகளில் முன்னின்று செயற்பட்டு மாணவர்கள் உள்ளங்களில் தனியிடத்தைப் பெற்றுக்கொள்ளல் சமூகத்தில் போற்றப்படுவோம். இதர ஆசிரியர்களின் செயற்பாடுகளால் பாடசாலைக்கு கிடைக்கும் பெருமையையும் சிறப்பையும் கண்டு பொறாமை கொள்ளாது மேலும் தட்டிக்கொடுத்து நாமும் இணைந்து செயற்பட்டு மெம்மேலும் நல்அடைவு மட்டத்தைப்பெற உழைப்பதே எமது கடமையாகும். நான் என் குடும்பத்திற்கு என்ன செய்தேன் என்று பார்ப்பதிலும் மேலானது எனது பாடசாலைச் சமூகத்திற்கு என்ன செய்தேன் என்று சிந்திப்பதே மேலானது.

**மானுடப்பிறப்பில் எத்தொழில் மேன்மையானது?**

மானுடம் என்பது பிறப்பிலிருந்து இறக்கும்வரை சமூகத்திற்கு நாம் பெற்ற அறிவை வழங்கி மேதைகளை உருவாக்கி அவர்களின் நல்வாழ்த்துக்களைப் பெற்று எமது பிறப்பின் மகிமையை இறைவனடியில் சமர்ப்பணம் செய்கின்றோம். மானிடப் பிறப்பின் பலாபலன்களை இப்பிறப்பிலே காண்பது ஆசிரியத்தொழிலே, இத்தத்துவத்தை உணர்வோம். இனிமேலும் நாம் செய்த குற்றங்களை நீக்கி எம்மினத்தின் சிறார்களின் அறிவையும், திறனையும், நற்பழக்க வழங்கங்களையும் வளர்க்க பாடுபடுவோம். ஏனைய தொழிலில் ஈடுபடுவோரும் நீதி நியாயங்களை அனுசரித்து உண்மையாக வாதிடும் மானிட ஜீவன்களின் பிரச்சினைகளை மனசாட்சியாக அணுக ஆசிரியத்தொழிலை வழிகாட்டியாக பின்பற்ற கற்றுக்கொள்க. ஆசிரியத்துவத்தைப் போற்றுவோம். சமூகத்தில் இறைவனை அடுத்து வணக்கத் திற்குரியவர்கள் ஆசிரியர்களே!

***திரு. சி. பொன்சிவநேசன்***
(ஆசிரியர்)
யா/கரணவாய் தாமோதரம் வித்தியாலயம்.

# மாணவனது பூரண வளர்ச்சியிற் பாடசாலையின் பங்கு



'மனிதனுள் ஆழ்ந்து கிடக்கும் பூரணத்துவத்தை வெளிப்படுத்துவது கல்வி' என்று விவேகானந்த சுவாமிகள் கூறியுள்ளார். உலகத்திலுள்ள நல்லனவற்றை தேடல் மூலம் பெறும் முயற்சி கற்றலாகும். "கற்றல்" என்பது எம்மைச் சுற்றியுள்ள உலகின் கோலங்களைப் பார்த்தலாகும். "கற்பித்தல்" என்பது எமது கூட்டான புரிந்துணர்வின் மூலம் மாணவர்களை பார்க்கச் செய்வதற் கான நிலைமைகளை உருவாக்குதலாகும்.

மனிதனின் அறிவு, திறன், விவேகம், மனப்பாங்கு என்பவற்றை வெளிக் கொணர்வது கல்வியாகும். வாழ்க்கையில் உயருதல் என்னும் குறிக்கோள் கல்வி மூலம் எய்தப் பெறுகின்றது. பண்புகளையும், திறன்களையும், உயர்த்தி வளர்ப்பதன் மூலம் மனிதனின் பூரணமான ஆளுமை வளர்ச்சிக்கு கல்வி வழி செய்கிறது. இத்தகைய கல்வியை இணைந்த கல்வியாக வழங்கும் போது ஒரு தேசத்தின் நலன், உறுதி, சமத்துவம், நீதி, நேர்மை எனும் விழுமியங் கள் நிறைந்த ஒரு உலகை கட்டியெழுப்ப கல்வி கருவியாக அமைகிறது.

இத்தகைய கல்விச் செல்வத்தை வழங்கும் பாடசாலை ஒரு பிள்ளையினுடைய வளர்ச்சியில் பெரும் பங்கினை வகிக்கின்றது என்றால் மிகையில்லை.

இப்பாடசாலைச் சூழலே மாணவன் ஒருவனைத் திறமையுடைய வனாகவும், அறிவுடையவனாகவும் ஆக்குகின்றது. பிள்ளையின் உடல் உள மேம்பாட்டுக்கும், அறிவு விருத்திக்கும் பாடசாலை பெரும் பங்காற்றுகின்றது. மாணவனது எதிர்காலத்தைத் திட்டமிடுவதில் பாடசாலைக் கல்வியே கணிச மான பங்கினை வகிக்கின்றது.

இக்கல்விச் செயற்பாட்டுக்கு அதிபர், ஆசிரியர், மாணவர்கள், கல்விசாரா ஊழியர், கல்வி அதிகாரிகள் ஆகியவர்களுடன் பௌதீக வளமான பாடசாலை, பூங்கா நூலகம், கணனி, மைதானம் என்பனவும் அடங்கும். சிறந்த அதிபர், ஆசிரியர்கள், மாணவனது கல்விச் செயற்பாட்டில் முக்கிய கவனத்தைச் செலுத்தினால் மாணவர்களது முன்னேற்றம் சிறப்பாக அமையும்.

மாணவர்களை நல்வழிப்படுத்தும் அதிபர் ஆசிரியர்கள், நடுநிலை, தொடர்பாடற் திறன், சமநிலை, தெளிந்த அறிவு, வழிகாட்டுதல், விட்டுக் கொடுத்தல் போன்ற தலைமைத்துவப் பண்புடையவராக இருப்பது சாலச் சிறந்தது. இதனைப் பார்த்து மாணவர்களும் சில பண்புகளையாவது ஏற்று வளருவான். கற்றலை மேம்படுத்த வகுப்பறைச் சமூகச் சூழல் முக்கியமானது. மாணவர்கள் கற்கக் கூடிய சூழலை உருவாக்கி கொடுப்பது பாடசாலையின் பொறுப்பாகும்.

ஆசிரியர் என்பவர் மாணவனது திறன்களை, வளர்பவராகவும், நம்பிக்கை ஊட்டுபவராகவும், நல்ல மனப்பாங்கை ஊட்டுபவராகவும் இருக்க வேண் டும். சமூகச் சவால்களை எதிர்கொள்ளவும், அதற்கு முகம் கொடுக்கக்கூடிய கல்விசார்

திறன்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். மாணவனுக்கு கல்வியை வழங்குவதிலும் பார்க்க அவர்களிடம் கரிசனை, கற்கையை விரிவுபடுத்தல் மகிழ்ச்சியாக வைத்திருத்தல், என்பவற்றையும் சேர்த்தே வளர்க்க வேண்டும். இத்தகைய பண்புகளையும் வளர்ப்பதில் பாடசாலை முன்நிற்க வேண்டும்.

மேலும் மாணவர்களது உளநிலைக்கு ஏற்பவும், அவர்களின் தேவைக்கு ஏற்பவும், கற்பிக்கும் போது மேலும் திறனை உயர்த்த முடியும். பிள்ளைகள் வாழ்க்கை முழுவதும் கற்க வேண்டியவர்கள். அவர்களுடைய மொழித் திறனை விருத்தி செய்தல் புலன்களை தொழிற்பட வைத்தல், உறவாடற் திறன், பரந்த அறிவு ஆகியவற்றை சமூகச் சூழலோடு பொருத்தி வாழக் கற்பித்தலும் அதற்கேற்ப வழிநடத்தலும் பாடசாலையில் கடமையாகும்.

பாடசாலையின் முக்கிய கடமை மாணவனை விளையாட்டு முறையில் கற்பித்தலை தூண்டுதலாகும். உடல் ஆரோக்கியம், உடல் சமநிலை கற்கின் றோம் என்பதை மறந்து கற்றலை வளர்த்துக் கொள்ளல் விளையாட்டினூடாக சில நற்பண்புகளையும் வளர்க்க முடியும். பொறுமை, விட்டுக் கொடுத்தல், வெற்றிதோல்வியை சமமாக மதித்தல் போன்ற பாண்புகளை இதிலிருந்து பெறலாம்.


பாடசாலையில் நடைபெறும் காலைப் பிரார்த்தனை கூட்டங்கள், மாண வருக்கு முக்கியமானது. இதன் போது மாணவர் ஒழுங்கைப் பேணும் தன்மை, அதிபர் ஆசிரியர் கூறும் நற்சிந்தனைகளை கிரகிக்கும் தன்மை, சக மாண வருடன் பழகும் விதம் ஆகியவற்றை பெறமுடியும். பாடசாலை நூலகம் மிகவும் முக்கிய மானதொரு வளர்ச்சிப் படியாகும். "வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகிறான்" சிறுவயதிலிருந்தே வாசிப்பதற்கு தூண்டுவதன் மூலம் கல்வியில் மேன்மையடைய வழிகாட்டலாம்.

பெற்றோர் ஆசிரியர் சந்திப்பு முக்கியமானதொரு விடயம். மாணவர்கள் கல்வி தொடர்பாக கலந்துரையாடி அவர்களது நிலைமைகளை அறிந்து அதற்கேற்ப வழிநடத்த முடியும். அத்துடன் ஒழுக்கம் தொடர்பான விடயங்களை யும் மணாவருக்கு எடுத்துக் கூறுதல் பாடசாலையின் பங்காகும்.

ஒரு மாணவனின் வளர்ச்சிக்கு கல்வியைவிட அவனது தனிப்பட்ட திறமைகளும் உள்ளன. அவற்றை மேம்படுத்த பாடசாலையில் இணைப் பாடவிதானச் செயற்பாடுகள் பயன்படுகின்றன. இதனால் வாழ்க்கைக்குரிய கல்வியைப் பெற்றுக் கொள்ள இப்பாடசாலை வழிகாட்டுகிறது.

மேலும் கணனிப் கல்வியும் இன்றை மாணவனுக்கு மிக அவசியமாகி விட்டது. இவற்றையும் இன்று பாடசாலை வழங்கி வருகின்றது. எனவே ஒவ்வொரு மாணவனின் திறமைக்கும் பாடசாலை வழிகோலுகின்றது. மாணவரது பூரண வளர்ச்சிக்கும், முழுமையான மனிதனாக ஆக்குவதிலும் பாடசாலையின் பங்கு பெரும்பங்காக அமையும் என்றால் அது மிகையாகாது.

***திருமதி. சுகந்தினி பாக்கியநாதன்***
ஆசிரியை
யா/ கரணவாய் தாமோதர வித்தியாலயம்.



2011 முதன்மை நிலை - 2 : தரம் 3, 4 கல்வி கற்கும் மாணவர்கள், மற்றும் அதிபர், ஆசிரியர்கள்.



# குழந்தையின் வளர்ச்சிப் பருவமும் அதன் ஒழுக்க நெறிகளும்

தமிழர் மரபில் கலை, கலாசாரம் போன்றவற்றுக்கு எவ்வளவு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றதோ, அதேயள வுக்கு ஒழுக்கத்துக் கும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. குழந்தைகளின் வளர்ச்சிப் பருவங்களை ஐந்து பிரிவுகளாகப் பிரித்து அவர்களின் கல்வி நிலை பற்றியும் ஒழுக்கநிலை பற்றியும் எடுத்துக் கூறிய முதன்மையான சிந்தனையாளரும் இயற்கைவாதியுமான ரூசோ - குழந்தைப் பருவம் பற்றிக் குறிப்பிடும்போது புத்தம் புதிதாக மலர்ந்திருக்கும் குழந்தையுள்ளத்தை எந்த வகையாலும் மாசுபடுத்தக் கூடாது. உடல் வளர்ச்சிக்கும் புலன்களின் வளர்ச்சிக்கும் உறுதுணை புரிய வேண்டிய பருவம் குழந்தைப் பருவமாகுமென்று குறிப்பிட்டார். இதனை ரூசோ 5 - 12 வயதுக்கு இடைப்பட்டவர்களை மாத்திரமே விசேடமாகக் குறிப்பிட்டுச் சொல்கிறார். இதனையே நவயுகக் கவிஞன் பாரதி -

ஓடி விளையாடு பாப்பா - நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா - ஒரு
குழந்தையை வையாதே பாப்பா

என குழந்தைப் பருவ சிறார்களுக்கு பாடல் மூலம் நெறிப்படுத்துவது போன்று சமுதாயத்தையே அகக்கண் கொண்டு நெறிப்படுத்தலானான். அன்று "பாரதி கண்ட கனவு" இன்றுவரை தமிழ்ச் சமுதாயம் எங்கும் ஓங்கி ஒலித்துக் கொண்டு இருப்பதைக் காணலாம். இவ்வாறே குடும்ப நிலையில் கற்றுக்கொள்ளும் பழக்கவழங்கங்கள் தான் எதிர்காலச் சந்ததி களை நெறிப்படுத்தும் திறவு கோலாக அமைந்து விடுகிறது. தாய்தந்தையர் பேசும் மொழியை சிறுவதில் கற்றுக்கொண்ட குழந்தை அந்த மொழியை அப்படியே பேசுவதை நாம் பார்த்திருக்கிறோம் அல்லவா? தந்தை செய்யும் தொழிலை குழந்தையும் வளர்ந்து மரபு ரீதியான தொழில்களைச் செய்கிறது அல்லவா?

அப்படித்தான் ஒழுக்கமும் இதனையே அடிமேல் அடித்தால் அம்மியும் நகரும் எனவும் எறும்பூரக்கல்லும் குழியுமென அவ்வழியில் பல அனுபங் களைப் பெற்ற எமது சான்றோர்கள் கூறிச் சென்ற முதுமொழிகளாகும். வீட்டிலே ஐந்து ஆண்டுகள் செல்வம் மிகுநிலையில் வாழ்ந்த குழந்தை முன்பள்ளி செல்லும்போது வீட்டு நடைமுறைகள் யாவும் தான் செல்லும் இடமெல்லாம் கிடைக்க வேண்டுமென நினைக்கிறது அவ்வாறு தான் எண்ணியது கிடைக்கப்பெறாதபோது - அடம்பிடித்தல் பலத்த குரலெடுத்து அழுதல் கத்துதல் போன்ற செயற்பாடுகள் மூலம் முரண்பட்டுக் கொள்கிறது. அதேபோன்று வீடு வந்ததும் புத்தகத்தை ஓரிடத்திலும் சம்பாத்தை இன்னோர் இடத்திலும் உடைகளை வேறோரிடத்திலும் சுழற்றி எறிந்துவிட்டு கைகால் முகம் கூட கழுவாமல் உணவை உண்பதற்கு அடம்பிடிப்பதை நாம் எமது வீடுகளிலேயே காண்கிறோம். தாய் தனது குழந்தை ஆரம்ப படிநிலையில் செய்யும் தவறுகளை புலன்களில் போட்டுக் கொள்வதில்லை. இவ்வாறான

நேரங்களில் குழந்தையை பெற்றோர் நல்வழிப்படுத்துதல் வேண்டும்.

கண்டிப்பும் கட்டாய பழக்கவழக்க செயற்பாடுகளும் குழந்தைப் பருவத்திலேயே வழங்குதல் வேண்டும். இல்லையேல் காலப்போக்கில் பெரிய தவறுகளை குழந்தைகள் செய்வதற்கும் பழிச்சொற்களை பெறுவதற்கும் பெற்றோரே காரணமாக அமைந்து விடுகின்றனர். குடும்பத்தில் தாய் அல்லது தந்தை ஆகிய இருவரில் ஒருவருக்காவது பிள்ளை கட்டுப்பட்டு நடப்பதற்கு ஆரம்பகாலம் முதல் கடைப்பிடிப்பது கட்டாயமானது. இந்நிலை குழந்தையை ஒரு பக்குவநிலைக்கு இட்டுச் செல்லும். எனினும் எதற்கெடுத்தாலும் தடை விதிப்பது போகும் இடங்களுக்கு போகவிடாமல் தடை செய்தல் போட்டிகள், சுற்றுலாக்கள் விழாக்கள் போன்றவற்றுக்கு போக விடாமல் தடுத்தல் சமவயதுக்குழுவினரின் முன் குழந்தைகளைத் திட்டித்தீர்த்தல் போன்ற செயற்பாடுகளைப் பெற்றோர் ஓரளவு நிறுத்திக் கொள்ளுதல் வேண்டும். இல்லையேல் பெற்றோரை குழந்தைகள் வெறுப்புடன் நோக்குவதற்கும், பாசம் வைப்பதற்கும் இடமில்லாமல் போய் விடும்.

சமவயதுக் குழுவினர் என்பது பொதுவாக தவிர்க்கப்பட முடியாத ஒன்றாகும். எனவே அதற்கு ஓரளவு இடம்கொடுக்கத்தான் வேண்டும். எனினும் கண்டிப்புடன் இடம்கொடுக்கலாம். இந்த வயது விரிவுகளைத் தாண்டி வந்தவர்கள் தான் பெற்றோர்கள். எனவே தாம் செய்த தவறுகளைத் தமது குழந்தைகளும் செய்து விடுவார்கள் என குழந்தைகளைத் தடை செய்வது தம்மைப்பற்றிய ஆளுமையை சமுதாயத்துக்கு வெளிச்சம் போட்டுக் காட்டு வதாக அமைந்து விடும். எனவே பாடசாலைப் பருவத்திலே தலைமை தாங் கும் பண்பை வளர்க்கவும் சிந்திக்கவும் கிரகிக்கும் ஆற்றலை வளர்க்கவும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை பெற்றுக்கொள்ளவும் குழந்தைகளுக்கு வேண்டிய கால அவகாசத்தை பெற்றோர்கள் வழங்குதல் வேண்டும்.

